★ காஞ்சிபுரம்
★ பெனாரிஸ்
★ கெவி தஞ்சூர்
★ பாட்லி
★ பட்டுவேஷ்டிகள்
மற்றும் சகலவிதமான
பிளஸ்வ் பீஸ் வகைகளுக்கும்
ராசி சில்க்ஸ்
நியூ மார்க்கட்
உட்புறம்
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3-50

மங்கள வைபவங்களுக் கேற்ப உடுபுடவைகள்
ராசி சில்க்ஸ்
நியூ மார்க்கட்
உட்புறம்
யாழ்ப்பாணம்.

சுடர் 5: பிரமோதூத ஸூ சித்திரை மீ 28 உ வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1410 ஷவ்வால்பிறை 15 (11 - 05 - 1990) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 83

# புலிகளுடன் பேச்சுகள் நடத்த முஸ்லிம் காங்கிரஸ் விருப்பம்

## கட்சித் தலைவர் அஷ்ரப் அறிவிப்பு

### ஏனைய அமைப்புக்களுடனும் பேச்சு நடக்கும்

— கொழும்பு செய்தியாளர் —

கொழும்பு, மே. 11

முஸ்லிம்களின் பிரச்சினைகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்துவதற்காக விடுதலைப்புலிகள் இயக்கத்துக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அழைப்பு விடுக்கும்.

இந்த விடயம் குறித்து ஏனைய கட்சிகள் மற்றும் அமைப்புக்கள் ஆகியவற்றுடனும் முஸ்லிம் காங்கிரஸ் பேச்சுவார்த்தை நடத்தும்.

இத்தகவலை அக்கட்சியின் தலைவரான ஜனாப். எம். எச். எம். அஷ்ரப் எம். பி. உதயனுக்குத் தெரிவித்தார்.

மற்றைய கட்சிகளுடனான பேச்சுக்கள் அடுத்த வாரம் ஆரம்பமாகும் என்றும் அவர் சொன்னார்.

'முஸ்லிம்களின் பிரச்சினைகள் சமாதானமாக, பேச்சுவார்த்தைகளின்மூலம், புரிந்துணர்வுடன் தீர்க்கப்பட வேண்டியதன் அவசியத்தை முஸ்லிம் காங்கிரஸ் உணர்ந்திருக்கிறது.

அதன் அடிப்படையிலேயே பேச்சுக்களைப் பல கட்டங்களில் நடத்தத் தீர்மானித்திருக்கிறோம் - என்று அவர் கூறினார்.

இந்தப் பேச்சுக்கள்கொழும்பிலும் தேவைப்படுமிடத்து கொழும்புக்கு வெளியிலும் நடைபெறும்.

நாடாளுமன்றத்தில் இடம் பெறும் கட்சிகளுடனும், வடக்கு, கிழக்கில் சிரத்தையுள்ள கட்சிகள் குழுக்களுடனும் பேச்சுக்கள் நடைபெறும்.

விடுதலைப் புலிகளுடனும் பேசுவோம். இதற்காகஅவர்களுக்கு அழைப்பு விடுக்க இருக்கிறோம் - இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார்.

## திருடர் கைவரிசை தொடர்கிறது

### யாழ் தொலைபேசிகள் மீண்டும் செயலிழந்தன

யாழ்ப்பாணம். மே 11

யாழ் நகர தொலைபேசிச் சேவை நேற்று முன்தினம் இரவு 9.30 மணி முதல் மீண்டும் முற்றாகச் சீர்குலைந்தது.

தொலைபேசி கம்பித் திருடர்களின் ''திருவிளையாடல்'' காரணமாகவே இம்முறையும் சேவை சீர்குலைந்தது

யாழ் தொலைத் தொடர்பு நிலையத்துக்கும் பழைய பிரதம தபால் கந்தோருக்கும் இடையில் சுமார் நூறு மீட்டர் நீளமான தொலைபேசிக் கம்பிகளையே இம்முறை திருடர்கள் வெட்டி எடுத்திருக்கிறார்கள்.

தொலைபேசி கம்பித் திருட்டு தொடர்ந்து நடைபெற்று வருவதால் தொலை

(7 ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



உண்ணா நோன்பைப்பற்றி உவருக்கு விளங்குமே... ...?

## ராஜீவ் உண்ணாவிரதம்

புதுடில்லி, மே 11

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி தலைமையில் இந்திரா காங்கிரஸ் தொண்டர்கள் நேற்று புதுடில்லி, ராஜ்கட் சதுக்கத்தில் காலை முதல் மாலை வரை அடையாள உண்ணாவிரதம் மேற்கொண்டனர்.

நாட்டின் வகுப்பு வாத சக்திகளின் நடவடிக்கைகளை கண்டித்து இந்த அடையாள உண்ணாவிரதம் மாநிலங்களிலும் காங்கிரஸ் தொண்டர்களால் நடத்தப்பட்டது.

[உ-எ]

## கொழும்பு விடுதிகளில் தேடுதல் நடத்த விசேட பொலீஸ் பிரிவு

கொழும்பில் உள்ள விடுதிகளில் திடீர் தேடுதல் நடத்த விசேட பொலீஸ் பிரிவுகள் அமைக்கப்பட்டிருப்பதாக பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஜெனரல் சிரில் ரணதுங்கா தெரிவித்தார்.

கொழும்பில் காரணமின்றி தங்கி இருக்கும் அனைவரும் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்படுவர் என்றும் அவர் சொன்னார்.

சட்டவிரோதமான ஆயுதங்களுடன் நடமாடி அமைதி வாழ்வை விரும்புபவர்களுக்கு இடைஞ்சல் ஏற்படுத்த எவரையும் அனுமதிக்கப் போவதில்லை என்றும் ஜெனரல் ரணதுங்கா சொன்னார்.

தகுந்த காரணம் இன்றி கொழும்பில் தங்கி இருப்போர் அனைவரையும் கைது செய்யும்வரை பொலீஸாரின் தேடுதல் நடவடிக்கைகள் கொழும்பு மாநகரில் தொடரும் என்றும் அவர் சொன்னார்.

''இதுவரை நடத்தப்பட்ட தேடுதலின் போது எத்தனை பேர் கைது செய்யப்பட்டனர் என்பது தெரியவில்லை என்று ஜெனரல் ரணதுங்க தெரிவித்தார்.

(உ-எ)

## சிகிரியா கொள்ளையர் மீது அதிரடிப்படை திடீர் தாக்கு!

### இருவர் பலி! கொள்ளைப்பொருட்கள் மீட்பு!!

கொழும்பு மே 11

சிகிரியா காட்டுப்பகுதியில் உல்லாசப்பயணிகளிடம் தொடர்ந்து கொள்ளையடித்து வந்த கொள்ளைக் கோஷ்டியினர் ஒளித்திருந்ததாகக் கூறப்படும் மறைவிடத்தின் மீது விசேட அதிரடிப் படையினர் திடீர் தாக்குதல் நடத்தினர்.

நேற்று அதிகாலை 4 30 மணியளவில் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் அக்கொள்ளைக் கோஷ்டியின் தலைவர், உபதலைவர் எனக் கருதப்படும் இருவர் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டனர்

அண்மையில் உல்லாசப் பயணிகளிடமிருந்து கொள்ளையடிக்கப்பட்டதாகக் கருதப்படும் கமராக்கள். டிரவலர்ஸ் செக்குகள், பாஸ்போர்ட்டுகள், பணம் மற்றும் உடைகள், சூட்கேஸ்கள் என்பனவும் படையினரால் மீட்கப்பட்டன.

தம்புள்ளை காட்டுப்பகுதியில் உள்ள ஒரு மலையின் குன்றில் சுமார் 25 பேரடங்கிய இந்தக் கொள்ளைக் கோஷ்டி மறைந்திருந்ததாகக் கூறப்படுகிறது.

இரகசியத் தகவல் ஒன்று கிடைத்ததையடுத்து கொள்ளைக் கோஷ்டி மீது அதிகாலையில் படையினர் திடீர் தாக்குதல் நடத்தினர். கொள்

(7 ஆம் பக்கம் பார்க்க)

## சாம் தம்பிமுத்துவின் பூதவுடல் நேற்று மாலை கனத்தையில் தகனம்

### பல அரசியல் தலைவர்கள் அஞ்சலி; இரங்கலுரை

கொழும்பு மே 11

சுட்டுக் கொல்லப்பட்ட சாம் தம்பிமுத்து எம். பியின் இறுதிக் கிரியைகள் நேற்று கொழும்பு கனத்தை மயானத்தில் நடைபெற்றன.

நேற்று முன்தினம் முதல், கொழும்பில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்கியிருந்த சிராவஸ்தி கட்டடத்தில் தம்பிமுத்துவின் பூதவுடல் வைக்கப்பட்டிருந்தது.

நேற்றும் பல அரசியல் பிரமுகர்கள், ஆதரவாளர்கள் அங்கு சென்று மறைந்த எம். பிக்கு தமது இறுதி அஞ்சலியைத் தெரிவித்தனர்.

நேற்று இறுதி அஞ்சலியைச் செலுத்தியவர்களில் எதிர்க் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா, அமைச்சர்கள் தொண்டமான், விஜேபால மெண்டிஸ், ரஞ்சன் விஜேரத்ன, ரணில் விக்கிரமசிங்க ஆகியோரும் இடம்பெற்றிருந்தனர்.

நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் சாம் தம்பிமுத்துவின் பூதவுடல் இறுதிக்கிரியைகளுக்காக கனத்தை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது அங்கு நடைபெற்ற இறுதி அஞ்சலிக் கூட்டத்தில் உறவினர்கள் உட்பட பெரும் எண்ணிக்கையானோர் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் அர

(7 ஆம் பக்கம் பார்க்க)

## மனைவி கலா அம்புலன்ஸில் கனத்தை மயானத்துக்கு

கொழும்பு, மே 11

சாம் தம்பிமுத்து எம். பியின் இறுதிக்கிரியைகள் நேற்று கனத்தை மயானத்தில் நடைபெற்றபோது அவரது மனைவி திருமதி கலா தம்பிமுத்துவும் மயானத்துக்கு அழைத்து வரப்பட்டிருந்தார்.

சூட்டுச் சம்பவத்தின் போது படுகாயமுற்றிருந்த திருமதி தம்பிமுத்து கொழும்பு ஆஸ்பத்திரியில் இருந்து அம்புலன்ஸ் மூலம் கனத்தை மயானத்துக்குக் கொண்டுவரப்பட்டார்.

அம்புலன்ஸிலிருந்து ஸ்ரெச்சரில் படுக்க வைக்கப்பட்ட நிலையில் அவர் இறக்கப்பட்டு கணவரின் பூதவுடலுக்கு அருகே கொண்டுவரப்பட்டார்.

'ஸ்ரெச்சரில்' படுத்தபடியே விம்மி, விம்மி அழுதவாறு தமது கணவருக்கு அவர் இறுதி அஞ்சலி செலுத்தினார்.

ஸ்ரெச்சரிலிருந்து அவர் இறக்கப்பட்டபோது அவரது உடலுடன் சேர்த்து மருத்துவர்கள் பொருத்தியிருந்த குழாய்கள், அதனுடன் சம்பந்தப்பட்ட மருத்துவ கருவிகள் ஆகியவையும் அவருடன் சேர்த்து மயானத்துக்குள் கொண்டுவரப்பட்டன.

[உ-2]

## சுபநேரம்

11-05- 1990

வெள்ளிக்கிழமை சித்திரை28

சுபநேரம்:
05-54 முதல் 07-24 வரை

இராகுகாலம்
10-24 முதல் 11-54 வரை

இவை இரவுக்கும் பகலுக்கும் பொருந்தும்

## களுவாஞ்சிக்குடி இருளில்!

கொழும்பு. மே 11

களுவாஞ்சிக்குடிப் பிரதேசம் நேற்று முன்தினம் இரவு முதல் இருளில் மூழ்கியிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது

அப்பகுதியில் உள்ள முக்கிய '' டிரான்ஸ்போமர் '' ஒன்று நாசமாக்கப்பட்டதை அடுத்தே அப்பகுதி இருளில் மூழ்கியதாகத் தெரிவிக்கப்பட்டது.

[உ-2]

## தமிழக மீனவர் அனுப்பப்பட்டனர்

யாழ்ப்பாணம், மே. 11

கடும்காற்றுக் காரணமாக பருத்தித்துறைப் பகுதியில் கரை ஒதுங்கிய தமிழக மீனவர்கள் 4 பேரும் நேற்று முன்தினம் பத்திரமாக தமிழ்

( 7ஆம் பக்கம் பார்க்க)

## மனித உரிமைகளுக்காக போராடிய கர்ம வீரர் சாம்

### பிரேமச்சந்திரன் எம். பி. உரை

கொழும்பு, மே 11

மனித உரிமைகளுக்காகப் போராடிய கர்ம வீரர் சாம் தம்பிமுத்து.

நேற்று கனத்தை மயானத்தில் இடம்பெற்ற இறுதிக்கிரியைகளின் போது யாழ். மாவட்ட எம். பி. திரு. கே. பிரேமச்சந்திரன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் பேசியதாவது:-

தன்னலம் கருதாமல்பொது மக்கள் நலனுக்காக நாடாளுமன்றத்தின் உள்ளேயும் வெளியேயும் அவர் செய்த சேவை மறக்க முடியாதது.

தமிழ் பேசும் மக்களின் குறிப்பாக ஈழத்தின் வடக்கு, கிழக்கு மக்களின் உரிமைக

(7 ஆம் பக்கம் பார்க்க)

## ஆந்திராவில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 57 ஆக உயர்வு

ஆந்திர மாநிலத்தில், சூறாவளி தாக்கியதன் காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 57 ஆக அதிகரித்தது.

கிருஷ்ணா மாவட்டத்தில் 24 பேரும், விசாகப் பட்டினத்தில் 14 பேரும், கிழக்கு கோதாவாரி, மேற்கு கோதாவாரி, குண்டூர் ஆகிய இடங்களில் தலா 6 பேரும், நெல்லூரில் ஒருவரும் உயிரிழந்தனர்.

கிருஷ்ணா மாவட்டத்தில் 90 கிராமங்கள் கடல் நீரில் மூழ்கின. இதனால் பத்து லட்சத்துக்கு அதிகமான மக்கள் பாதிக்கப்பட்டனர்.

சுமார் ஒன்றரை லட்சம் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டனர்.

மின் விநியோகம், தகவல் தொடர்புகள் துண்டிக்கப்பட்டன.

ஆந்திர மாநில அகதிகளுக்கு வழங்கவென தமிழ்நாடு அரசு முதலமைச்சர் நிதியில் இருந்து 25 லட்சம் ரூபாவை வழங்கியது.

புயலில் பாதிக்கப்பட்ட பகுதிகளை பிரதமர் வி. பி. சிங் நாளை [சனி] நேரிற் பார்வையிடுவார்.

இதனிடையில் தமிழ் நாட்டில் கடும் மழை காரணமாக 6 பேர் உயிரிழந்தனர்.

தமிழ் நாட்டின் கரையோரப் பகுதிகளையும் சூறாவளி தாக்கியது.

[இ-எ]

### ஹோலந்தில் உள்ள

## ஈழத் தமிழ் அகதிகளை திருப்பி அனுப்பாதீர்கள்!

### மனித உரிமை ஆணைக்குழு வேண்டுகோள்

அம்ஸ்ரடாம், மே 11

இலங்கைத் தமிழ் அகதிகளை தாயகம் திருப்பி அனுப்புவதை இடைநிறுத்தி வைக்கும்படி ஐரோப்பிய மனித உரிமை ஆணைக்குழு ஹோலந்து அரசாங்கத்தைக் கோரியுள்ளது.

ஹோலந்தில் ஆயிரக்கணக்கான இலங்கைத் தமிழர்கள் அகதிகள் அந்தஸ்து கோரி விண்ணப்பித்து உள்ளார்கள்.

அவர்களைத் தாயகம் திருப்பி அனுப்ப ஹோலந்து அரசு நடவடிக்கை எடுத்து வரும் வேளையில் அகதிகள் சார்பில் ஹோலந்து வழக்குரைஞர்கள் ஐரோப்பிய மனித உரிமை ஆணைக்குழுவிடம் முறைப்பாடு ஒன்றைச் சமர்ப்பித்தனர்.

இதனை ஆணைக்குழு ஏற்றுக் கொண்டு, இலங்கைத் தமிழ் அகதிகளை தாயகம் திருப்பி அனுப்பி வைப்பதை இடைநிறுத்தி வைக்கும்படி ஹோலந்து அரசைக் கோரியுள்ளது.

ஆணைக்குழு முதல் தடவையாக இக்கோரிக்கையை ஹோலந்து அரசுக்கு விடுத்து உள்ளது குறிப்பிடத்தக்கது.

(இ-எ)

## மாட்டு வண்டிப் போட்டி காண மருதனார்மடத்தில் மக்கள் வெள்ளம்!

மயிலணி, மே 11

ஷப்றா - உதயன் அனுசரணையுடன் நேற்று மருதனார்மடத்தில் நடந்த மாபெரும் மாட்டு வண்டிச் சவாரிப் போட்டியைப் பார்க்கப் பல்லாயிரக் கணக்கான மக்கள் கூடியிருந்தனர்.

முதியவர்களும், இளைஞர்களும், ஏன் பெண்களும்கூட மருதனார்மடம் சந்திக்கு அருகில் உள்ள திடலில் திரண்டு, முண்டி அடித்துக் கொண்டு வண்டிச் சவாரிப் போட்டியைக் கண்டுகளித்தமை கண்கொள்ளாக் காட்சியாக அமைந்தது.

காற்றுப் பலமாக வீசிக் கொண்டு, மண்ணை மழையாகப் பெய்துகொண்டிருந்த போதிலும் ரசிகர்கள் பிடித்த இடம் நகராது, வைத்த கண் வாங்காது வெகுஆர்வத்துடன் வண்டிகள் நிரைகட்டித் துள்ளிப்பாய்ந்து ஓடியதைக்கண்டு ரசித்தார்கள்.

சவாரியை எவ்வித தடங்கலும் இன்றிப் பார்க்க வேண்டும் என்பதற்காக பலர் லொறிகளை வீதிக் கரையில் நிறுத்தி அவற்றின் மீது ஏறி

(7 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் தவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல இன பம்பாய் வெங்காய விதை விற்பனைக்குண்டு. சிவ ஐங்ரன், விவசாய விற்பனை நிலையம், அராலி மேற்கு, வட்டுக்கோட்டை. (3446)

பூரண விளைத்திறனுடைய பம்பாய் வெண்காய விதை (புதிய இறக்குமதி) விற்பனைக்குண்டு பிள்ளையார், 259. காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (3451)

### கோழிக்குஞ்சு விநியோகம்

கறுப்பு (புலிமத்) சேவற் குஞ்சு 12/5/90 சனிக்கிழமை விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்க. சற்குணராசா &பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில், (3450)

ஒருமாத Hyline வெள்ளைப் பேட்டுக் குஞ்சுகள் 16/5/90 புதன் கிழமை விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்க. சற்குணராசா & பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில். (3449)

### சஞ்சிகைகள்

கலைக்கதிர், கலைமகள், ஞானபூமி, ரத்தின பாலா, குமுதம், கல்கி. ஆனந்த விகடன், துக்ளக், பேசும்படம், பொம்மை, கல்கண்டு, இந்தியாடுடே. (தமிழ் ஆங்கிலம்) Time News week Sport Star Front Line மற்றும் சஞ்சிகைகள் அனைத்தும் சந்தா ஏற்றுக் கொள்கிறோம். இம் மாதம் முதல் சஞ்சிகைகளின் விலை குறைக்கப்பட்டுள்ளது. பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (சி/4340)

### சஞ்சிகைகள் ஓடர்

மங்கை, அம்புலிமாமா, ஆனந்தவிகடன், கல்கண்டு, கோகுலம், இரத்தினபாலா, பாலமித்திரா, சுமங்கலி, யூனியர் விகடன், போஸ்ட் இந்தியா ருடே, FRONT LINE. SPORT STAR. ஞானபூமி, பொருளியல் நோக்கு மற்றும் எல்லா இந்திய இலங்கை சஞ்சிகைகள் மீண்டும் ஓடர் செய்யலாம். ஸ்ரீகாந் புத்தகசாலை, No.165 மின்சாரநிலையவீதி, பஸ்நிலைய முன்புறம், யாழ்ப்பாணம். (C/4343)

### தேவை

றோல் பற்றிஸ் தயாரிக்கவும் புரியாணி தயாரிப்பதில் அனுபவமுள்ளவர்கள் தேவை நேரில்வரவும். றிக்கோ யாழ்ப்பாணம். (13132)

தமிழ், ஆங்கில எழுத்துக் கோப்பாளர் (கொம்போசிங்) பயிற்சியாளர் தேவை. இருபாலாரும்விண்ணப்பிக்கலாம். பயிற்சிக் காலத்தில் பயிலுநர் வேதனம் வழங்கப்படும். நேரில் வரவும் செட்டியார் அச்சகம் 430, K.K.S. Road, யாழ்ப்பாணம். [4380]

### Wanted

Wanted an Experienced Female Clerk for construction firm in Jaffna with experience in book-keeping and typing. Please send your Bio-Data on or before 15th may, 90 to the Following Address, Salary Negotiable No-126, C/O Uthayan, Jaffna [13042

### உணவுசேவை

உங்கள் நாளாந்த வைபவங்களுக்கு (புரியாணி, பிறைட்றைஸ், நூடில்ஸ் வகைகள் சூப்வகைகள்) நாடவேண்டிய இடம் உங்களின் கிறில்-சைனிஸ்இன் இல 181, பலாலி வீதி, கோண்டாவில் பழைய இடத்தில் இருந்து, 200 மீற்றர் தொலைவில். (12999)

### A/L CHEMISTRY

பல் தெரிவு வினாக்கள் மூலம் பொது இரசாயனம் பௌதீக இரசாயனமும் (G.C.E. A/L வகுப்புகளுக்குரியது) by ம. செல்வரத்தினம் B. Sc. இராஜேஸ்வரி மகேஸ்வரன் A/L Chemistry பரீட்சைக்குரிய மிக முக்கிய தகவல்களை உள்ளடக்கியது. விலை ரூபா 75/- வெளியீடு விற்பனை பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (சி-4493)

மக்கள் முகம்

## பா ஓதலில் முதல் இடம்



யாழ். கோட்டப் பாடசாலைகள் மட்டத்திலான தமிழ்த்தினப் போட்டிகள் அண்மையில் நடைபெற்றபோது கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலய மாணவன் செல்வன்ம. பிரபாகரன் பா ஓதலில் முதற்பிரிவில முதலாம் இடம்பெற்று மாவட்டப் போட்டிக்குத் தெரிவானார். (ப-30)

மன்னார்
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

## வெற்றிடம் பொது முகாமையாளர்

(சிரேஸ்ட முகாமை நிலையின் 6 ஆவது சம்பளத்திட்டம்)

மேற்குறிப்பிட்ட பதவிக்கான விண்ணப்பங்கள் இலங்கைப் பிரஜைகளிடமிருந்து கோரப்படுகின்றன,

வயது: 21க்கும் 40க்கும் இடைப்பட்டதாக இருத்தல் வேண்டும். (கூட்டுறவு ஊழியராக இருப்போருக்கு வயதெல்லை கவனிக்கப் படமாட்டாது)

வேதனம்: 1755 — 2805
75x6 100x6
(இத்துடன் மாதாந்தம் அரசாங்கத்தால் அனுமதிக்கப்பட்ட வாழ்க்கைச் செலவுப் படியும் சேர்த்து வழங்கப்படும்)

விண்ணப்ப முடிவுத் திகதி:
09 — 06 — 1990

அனுப்பவேண்டிய முகவரி:
பதிவுத் தபால் "செயலாளர், மன்னார் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், வயல் வீதி. மன்னார்".

தேவையான தராதரம் மற்றும் தகைமைகள் பற்றிய விபரங்களை அண்மையிலுள்ள பல நோ. கூ. சங்கம் மூலம் அறியலாம் அல்லது ரூபா 4/-க்கான தபாற் கட்டளையுடன் சொந்த முகவரியிட்ட தபாலுறையும் எமக்கு அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். அன்றேல் நேரடியாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

ஜனாப் எம். எம். கியாஸ்
செயலாளர்

மன்னார் பல நோ. கூ. சங்கம்,
மன்னார். [சி-4510]

சக்தி துணை

# வற்றாப்பளை கண்ணகி அம்பாள் ★ கோயில் உற்சவம் ★

பிரமோதூத வருசம்
பாக்குத் தண்டல் வைபவம் - 1990- 05- 28 திங்கள்
தீப தீர்த்தம் எடுத்தல் - 1990- 06- 04 திங்கள்

## பொங்கல் உற்சவம் - 1990- 06- 11 திங்கள்

—பரிபாலனசபை
(13043)

## படித்த இளைஞர் தினம் 13-05-1990

சிரிப்பின் செல்வன்
முத்துக்குமாரு கோபாலகிருஷ்ணனின்

# முதலாவது ஞாபக தினம்

அன்புடையீர்!

13 - 05 - 1990 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் படித்த இளைஞர் தினம் யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

இப்பாடசாலையில் கல்வி பயின்று நியாயமற்ற முறையில் எதுவித சட்ட விசாரணையுமின்றி கொலை செய்யப்பட்ட கோபாலகிருஷ்ணனை மையமாக வைத்து இதுபோன்ற மற்றைய இளைஞர்களையும் கௌரவிக்கும் முகமாக இவ்விழா எடுக்கப்படுகிறது.

கல்லூரி அதிபர் தலைமையில் நடைபெறவிருக்கும் இவ்விழாவிற்குப் பல அறிஞர் கலந்து கொண்டு உரையாற்றவிருக்கிறார்கள்.

காலை 10 மணிக்கு விசேட தபால் உறை இரத்துச் செய்யும் வைபவம் அங்கு ஏற்படுத்தப்படவிருக்கும் தபாற் கந்தோரினால் நடைமுறைப்படுத்தப்படவிருக்கிறது.

அன்பர்கள், நண்பர்கள், அனுதாபிகள், ஆதரவாளர்கள் கலந்து விழாவைச் சிறப்பித்தேகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

முத்துக்குமாரு குடும்பத்தினர்
கோபாலகிருஷ்ணன் ஞாபக நிதிய உறுப்பினர்
சர்வதேச முத்திரை சேகரிப்போர் அமைப்பு

"துர்க்கா ஹோம்"
8/2, தோம்பை வீதி,
உடுவில் கிழக்கு, சுன்னாகம்.

[13044]

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளுக்கான கட்டிட வேலைகளுக்கான

# கேள்விப் பத்திர அறிவித்தல்

கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான கேள்விகள் கிளிநொச்சிக் கல்வித் திணைக்களத்தின் கேள்விச் சபைத் தலைவரால் 1990ஆம் ஆண்டு மே மாதம் 24ஆம் திகதி வியாழக்கிழமை (1990-05-24) காலை 11 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும். கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் வேலைகளுக்கும் அதன் எதிரேயுள்ள தொகைக்கும் அல்லது அதனிலும் கூடிய தொகைக்கும் கட்டிட வேலை செய்வதற்கென அரச திணைக்களம் ஏதாவதொன்றில் பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்களுக்கு 1990ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் திகதி (1990-05-18) பிற்பகல் 2 மணி வரை மீளளிக்கப்படும்/மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணங்களைச் செலுத்தியதின் பேரில் கேள்விப் பத்திரங்கள் கிளிநொச்சிப் பிரதேசக் கல்வித் திணைக்களத்தில் வழங்கப்படும். கேள்விப் பத்திரப் பணம் கேள்வி வைப்புப் பணம் ஆகியன கிளிநொச்சி பிரதேசக் கல்வித் திணைக்களத்தில் செலுத்தப்படல் வேண்டும். கேள்விகள் யாவும் 1990ஆம் ஆண்டு மே மாதம் 24ஆம் திகதி (1990-05-24) காலை 11.30 மணிக்குக் கிளிநொச்சிப் பிரதேசக் கல்வித் திணைக்களத்தில் திறக்கப்படும். இச் சமயம் கேள்விக்காரர் சமுகமளிக்கலாம்.

தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் இதுபற்றி அறிவிக்கப்பட்ட திகதியிலிருந்து 10 நாட்களுக்குள் ஒப்பந்தம் கைச்சாத்திடப்படல் வேண்டும். தவறின் மறு அறிவித்தலின்றி தெரிவுகள் இரத்துச் செய்யப்படும். இக் கட்டிட வேலைகளுக்கான கொடுப்பனவுகள் யாவும் கிளிநொச்சி மாவட்ட ஆணையாளரினால் (அரசாங்க அதிபரினால்) மேற்கொள்ளப்படுமென்பதையும் கவனத்திற் கொள்ளவும்.

மேலதிக விபரங்களைக் கிளிநொச்சிப் பிரதேசக் கல்வித் திணைக்களத்தில் பாடசாலைகள் கட்டிட வேலைப் பகுதியில் பெற்றுக் கொள்ளலாம்.

சி. வேலாயுதம்,
பிரதேசக் கல்விப பணிப்பாளர்,
கிளிநொச்சி.

பிரதேசக் கல்வித் திணைக்களம்,
கிளிநொச்சி 1990-05-07

| | பாடசாலையின் பெயர் | வேலை விபரம் | பதிவு செய்திருக்க வேண்டிய தொகை |
|---|---|---|---|
| 1. | கிளி/வட்டக்கச்சி ம. வி. | 80'/20' புதிய பாடசாலை, க கட்டிடம் அமைத்தல் | ரூபா. 350000/- |
| 2. | கிளி/முருகானந்த ம வி | மேற்படி | மேற்படி |
| 3 | கிளி/ பரந்தன் இ.ம.வி. | மேற்படி | மேற்படி |
| 4 | கிளி/ குஞ்சுக்குளம் கணேச வி. | மேற்படி | மேற்படி |
| 5. | கிளி/ ஜெயபுரம் அ. த. க பா. | 60'/20' புதிய பாடசாலைக் கட்டிடம் அமைத்தல் | ரூபா. 300000/- |
| 6. | கிளி/ பிரமந்தனாறு அ. த. க. பா. | மேற்படி | மேற்படி |
| 7. | கிளி/ஊற்றுப்புலம் அ. த. க. பா. | 50'/20' புதிய பாடசாலைக் கட்டிடம் அமைத்தல் | ரூபா. 250000/- |
| 8. | கிளி/ஆனையிறவு அ. சி. த. க. பா. | 40'/20' புதிய பாடசாலைக் கட்டிடம் அமைத்தல் | ரூபா. 250000/- |
| 9. | கிளி/ இயக்கச்சி அ. த. க. பா | மேற்படி | ரூபா. 300000/- |
| 10. | கிளி/பூநகரி ம. வி. ததி | பிரார்த்தனை மண்டபம் அமைத்தல் | ரூபா. 750000/- |
| 11. | கிளி/கிளிநொச்சி ம. ம. வி. | 70'/25' மேல்மாடிக் கட்டிடம் [illegible] அமைத்தல் | ரூபா. 600000/- |

[சி-4507]

# இசை நடிகமணிக்கு இன்று பாராட்டு விழா

சண்டிலிப்பாய் மே 11

இன்று வெள்ளிக்கிழமை இரவு 8 மணிக்கு சண்டிலிப்பாய் சீரணி அம்மன் கோயிலில் இசை நடிகமணி வி. என். செல்வராசா பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட இருக்கிறார்.

திரு. வி. என். செல்வராசா 30 ஆண்டுகளுக்கு மேலாக நாடகப் பணி ஆற்றிவருகின்றார்.

அவரை 1959 ஆம் ஆண்டு மாரியப்பா குழுவினர் தம்முடன் இணைத்து பிரதம பாத்திரம் கொடுத்து பல இசை நாடகங்களை மேடையேற்றினர். அவர் காலஞ்சென்ற சின்னையா தேசிகர், எஸ். வி. மாசிலாமணி, நெல்லியடி கிருஷ்ணாழ்வார், பெரியவிளான் சி. ரி. செல்வராசா, நடிகமணி வி. வி. வைரமுத்து போன்றவர்களுடன் இணைந்து நடித்து பல இசை நாடகங்களை மேடை ஏற்றியுள்ளார்.

அண்மையில் "நாடக கலாஜோதி" என்ற பட்டம் இவருக்குப் பருத்தித்துறையில் வழங்கப்பட்டது. கலையரசு சொர்ணலிங்கம் இசை நடிகமணி" என்ற பட்டத்தை அவருக்கு முன்னர் வழங்கினார்.

திருமுருக கிருபானந்த வாரியார், காரைக் குறிச்சி அருணாசலம் ஆகியோரின் ஆசியைப் பெற்று கொழும்பு சரஸ்வதி மண்டபத்திலும் விவேகானந்தா மண்டபத்திலும் பல இசை நாடகங்களை இவர் நடித்துள்ளார். (க)

பல்கலைக்கழகத்திற்குள்

# வெளியார் நுழைந்தால் உபவேந்தரே பொறுப்பு

கொழும்பு மே 11

பல்கலைக்கழகத்தினுள் வெளியார் எவரும் நுழைய அனுமதித்தால் அதற்கு பல்கலைக்கழக உபவேந்தரே பொறுப்பு ஏற்கவேண்டும்.

அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா நேற்று முன் தினம் செய்தியாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்தார்.

பல்கலைக்கழக மாணவிகள் பல்கலைக்கழகங்களின் உள்ளேயும் வெளியேயும் வைத்து மானபங்கப்படுத்துகின்றனர். இதை அனுமதிக்க முடியாது இச்செயல்களைக் கண்டுபிடிக்க ஒவ்வொரு பல்கலைக்கழகத்திலும் மாணவர்களை உளவாளிகளாக வைத்துள்ளோம்.

விரைவில் குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்படுவர் என்று அமைச்சர் விஜேரத்தினா மேலும் சொன்னார். (அ-எ)

# பெரியோருக்கு கௌரவம் இளம் சந்ததிக்கு விழிப்புத்தரும்

## மட்டக்களப்பு விழாவில் உரை

பட்டிருப்பு, மே 11

"குழந்தைகள்தான் வருங்காலச் சந்ததிகள். எமது இடத்தை நிரப்பவேண்டியவர்களும் அவர்களே. ஒரு சமூகத்தின் பெரியவர்கள் கௌரவிக்கப்படும்போது இளம் சந்ததியினருக்கு அது விழிப்பை ஊட்டுகிறது."

மட்டக்களப்பு மாவட்ட கலாசாரப் பேரவையின் இவ்வாண்டுக்கான கலைவிழாவும் அறிஞர்கள் கௌரவிப்பு வைபவமும் மட்டக்களப்பு மாநகரசபை மண்டபத்தில் நடைபெற்றபோது இலக்கிய மணி பண்டிதை கங்கேஸ்வரி கந்தையா மேற்கண்டவாறு கூறினார்.

மட்டு. மேலதிக அரச அதிபர் திரு. ஆர். தியாகலிங்கம் இக் கூட்டத்துக்கு தலைமை வகித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபரும், மாவட்ட ஆணையாளருமான திரு. ஆர் யோகநாதன் பேசுகையில் "வடக்கு கிழக்கு மாகாணங்களில் சுமுக நிலை ஏற்பட்டுள்ளதால் கலை இலக்கியப் படைப்புகளின் மேம்பாடுகளை மக்கள் முன்னிலையில் கொண்டுவரமுடிந்துள்ளது." என்று கூறினார்.

மட்டக்களப்பின் முதுமூவறிஞர்களான திரு. கே. கணபதிப்பிள்ளை (தத்துவ சிரோன்மணி), வித்துவான் பண்டிதர் வீ. சி. கந்தையா (மகாவித்துவான்), பண்டிதை கங்கேஸ்வரி கந்தையா (இலக்கிய மணி) ஆகியோர் பொன்னாடை போர்த்தப்பட்டனர். (இ-121)

## மோசமான வீதி

கோப்பாய் மே 11

இருபாலை ஆட்டுபட்டி வீதி ஒரே குன்றும் குழியுமாக காணப்படுகின்றது. மழை காலங்களில் இவ் வீதியால் விவசாயிகள் திருநெல்வேலிச் சந்தைக்கு தமது விளை பொருள்களை எடுத்துசெல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. (இ-72)

## ஓட்டோக்கள் பதிவு

யாழ்ப்பாணம் மே 11

யாழ். மாநகர சபை எல்லைக்குள் வாடகைக்கு நிறுத்தப்படும் ஓட்டோக்கள் யாவும் இம் மாதம் 15 ஆம் திகதிக்குள் பதிவு செய்யப்பட வேண்டும். இத் திகதிக்குப் பின் பதிவு செய்யப்படும் ஓட்டோக்கள் யாவும் பிரவேசப் பணமாக 5000 ரூபா செலுத்த வேண்டும் என்று யாழ் ஓட்டோ தொழிலாளர் சங்கத் தலைவர் திரு. ந. கதிரவேற்பிள்ளை அறிவித்துள்ளார். (இ-7)

யாழ். மாநகர

# ஆட்டோ தொழிலாளர் சங்க அறிவித்தல்

07-05-90 அன்று ஆட்டோ ஊழியர்களால் நடாத்தப்பட்ட பொதுக்கூட்டத்தில் எல்லாத் தொழிலாளர்களினதும் ஒத்துழைப்புடன் எடுக்கப்பட்ட முடிவின் படி யாழ். மாநகர எல்லைக்குள் வாடகைக்காக அமர்த்தப்படும் ஆட்டோக்கள் யாவும் 15-05-1990க்கு முன் யாழ் ஆட்டோ சங்கத்தில் பதிவு செய்தல் வேண்டும். அத் திகதிக்குப் பின் பதிவு செய்யும் எந்த ஆட்டோவும் ரூபா 5000/- பிரவேசப் பணமாக செலுத்தி பதிவைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் சங்கத்தில் பதிவு செய்யாத ஆட்டோக்கள் யாழ். மாநகர எல்லைக்குள் வாடகைக்கு அமர்த்தப்படுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டாது.

சங்கத்தில் ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட ஆட்டோக்கள் மட்டும் யாராலும் வாங்கும் போதும் விற்கப்படும் போதும் எவருக்கும் பிரவேசப் பணமாகிய ரூபா 5000/- அறவிடப்பட மாட்டாது என்பதை யாழ் ஆட்டோ சங்கத்தலைவர் திரு. ந. கதிரவேற்பிள்ளை அவர்கள் ஆட்டோ உரிமையாளர் தொழிலாளர்களுக்கு அறியத்தந்துள்ளார்.

ந. கதிரவேற்பிள்ளை
இல. 40, முத்தமிழ்றோட்,
கொட்டடி யாழ்.

(13137)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**

நெஞ்சத்தார் காத லவராக வெய்துண்டல்
அஞ்சுதும் வேபாக்கு அறிந்து.

**பொருள்:**

எம் காதலர் நெஞ்சினுள் இருக்கின்றார்; ஆகையால் சூடான பொருளை உண்டால் அவர் வெப்பமுறுதலை எண்ணிச் சூடான பொருளை உண்ண அஞ்சுகின்றோம்.


# உதயன்

இல: 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 2288

11 - 05 - 1990 த. பெ இலக்கம் 25


## வெசாக்கால போதனையில்..

ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசா விடுத்துள்ள வெசாக் தினச் செய்தி பௌத்தர்களின் சிந்தனையைத் தூண்டி உரிய வழிக்கு இட்டுச் செல்வதாக அமைந்துள்ளது. போதி மாதவரின் போதனைகள் சிலவற்றை எடுத்தாண்டு, மேற்கோள் காட்டி, தற்போதைய சூழ்நிலையில், அரசியல் பின்னணியில் இந்த நாட்டின் பெரும்பான்மை மக்களான பௌத்தர்கள்—சிங்களவர்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதை அவர் கச்சிதமாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்.

எமக்குரிய கஷ்டங்களுக்கும் துன்பங்களுக்கும் காரணஸ்தர்கள் நாமே. முற்பிறவியில் செய்த ஊழ் வினைகள் மட்டுமன்றி இப்போது நாம் செய்யும் வினைகளும் எமது இன்ப. துன்பங்களுக்கு மூலவேர்களாகின்றன. இதனை இந்துமதம் அர்த்தபுஷ்டியாகச் சொல்கிறது. இந்துவாகப் பிறந்து, சித்தார்த்தனாக வளர்ந்து, போதி தத்துவராகவும், கௌதமராக விழுமியம் கண்ட புத்தரும் அந்தத் தத்துவத்தையே மீள்வடிவம் செய்திருக்கிறார்

ஒவ்வொரு செயலுக்கும் ஒவ்வொரு நோக்கம் இருக்கும் என்பது பௌதிகவியல் உண்மை இந்த விஞ்ஞானக் கோட்பாடு மனிதனின் வாழ்க்கைக்கும் பொருந்துவதே முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் என்ற முதுமொழியில் அந்தக் கோட்பாடு மிளிர்ந்து காணப்படுகிறது. அதனை அடிநாதமாகக் கொண்டே 'நன்றும் தீதும் பிறர் தர வாரா'' என்ற தத்துவ வாசகம் பிறந்தது.

நமது செயல்கள் மூலம், நாம் செய்த வினைகள் மூலம் நாம் அனுபவிக்கும் கஷ்டங்களை, குறைகளைத் தீர்த்துக் கொள்வதற்கு எம்மை நாமே திருத்திக்கொள்ள வேண்டும். பிறவழிகள் மூலம் எமது தவறுகளை நீக்கிக் கொள்ள முடியாது. எமது குறைகளை அகற்றுவதும் அசாத்தியம். இதனைப் புத்த பெருமான் மிகத்தெளிவுபடப் போதித்திருக்கிறார்.

மதங்கள் எல்லாமே நல்ல, அரிய, அருமையான கோட்பாடுகளையும், தத்துவங்களையும், வழிமுறைகளையும் முன்வைத்திருக்கின்றன. ஆனால் மனிதர்கள் அவற்றைப் படிக்கிறார்கள், கேட்கிறார்களே அன்றி. நடைமுறையில் கைக்கொள்கிறார்கள் இல்லை.

தமது தவறுகளுக்குத் தம்மைத் திருத்துவதற்குப் பதிலாக, பிறர்மீது பழிசுமத்தவும், பழிதீர்க்கவும் செய்கிறார்கள். இதனால் உலகமே இருண்டதாகிவிட்டது. இடர் நிறைந்ததாகிவிட்டது. நாட்டுக்கு நாடு பிரச்சினைகளும் மலிந்து விட்டன. மோதலும், போரும், மரணமும், மரண பயமும் நித்தியமாகிவிட்டன.

எமது நாடும், மக்களும் அவற்றுக்கு விதிவிலக்கல்லர். கடந்த பல ஆண்டு காலமாக இந்த நாடு இடர்களை எதிர்நோக்கி, வாடிவதங்கியது. இப்போது சற்று நிம்மதியாக உள்ளது. அந்த நிம்மதியும் அமைதியும் நிரந்தரமாக வேண்டும் என்பதே அமைதி விரும்பும் மக்கள் அனைவரினதும் பெருவிருப்பம். பௌத்தர்களும் அதனையே நிச்சயம் விரும்புவர் என எதிர்பார்க்கலாம்.

மனிதனுடைய பிரச்சினைகளுக்கு எல்லாம் அவனுடைய மனமே காரணம். அந்த பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் கருவியாக விளங்குவதும் மனமே. மக்கள் மனத்தைச் சரியான வழியில் ஆற்றுப்படுத்தினால் பிரச்சினைகள் அணுகமாட்டா. மனச்சாட்சியுடன் நடந்து கொண்டால் மோதல்களுக்கு இடமில்லை.

அமைதி விரும்பும் மக்கள், நிரந்தர நிம்மதி விரும்பும் மக்கள் மனசாட்சியுடன் நடக்கவேண்டும். இதனையே—மற்றவர் நிம்மதியையும், நலனையும் நாடிச் செயற்பட வேண்டும், தம்மைச் சூழவுள்ள அனைவருக்கும் நலனையும், இன்பத்தையும் பயக்கும் வகையில் மனநிறைவு, தியாகமனப்பான்மை, நல்லொழுக்கம் ஆகிய பண்புகளை அனுசரிக்க உறுதி பூணவேண்டும்— என்று ஜனாதிபதி கேட்டிருக்கிறார் எனக் கருதலாம்.

இந்நாட்டின் பெரும்பான்மையினரான பௌத்த மக்கள் பந்தல்கள் கட்டி, சோடனை போட்டு, தானங்கள் வழங்கி, ''பிங்கமக்கள்'' நடத்துவதால் மட்டும் நிம்மதியையும் அமைதியையும் தேடிக் கொள்ள முடியாது. பிரச்சினைகளைத் தீர்க்கவும் முடியாது. புத்தரின் போதனைகளைச் சரிவரக் கடைப்பிடிக்கப் பழக வேண்டும்.

வாழு வாழவிடு என்ற கோட்பாட்டை உணர்ந்து சகிப்புத் தன்மை, சகோதரத்துவம் ஆகியவற்றைக்கடைப்பிடிக்க வேண்டும். தமிழர்களும் இந்த நாட்டில் உரிமைகளுடனும், கௌரவத்துடனும் வாழவேண்டும் என்று நியாயத்தை உணர்ந்து நாட்டின் இனப்பிரச்சினையைத் தீர்க்க ஜனாதிபதிக்கும் அரசுக்கும் ஆதரவும் ஒத்துழைப்பும் நல்க வேண்டும்.

இதுவரை விட்ட தவறுகளை திருத்திக்கொள்ள வேண்டும். புத்த பெருமானின் சீடர்களாகவும், சிங்கள மக்களின் மதிப்புக்குரிய குருமார்களாகவும் விளங்கும் நமது பிக்குகள் தமது மக்களுக்கு இதனைஉணர்த்துவார்களா? வெசாக் காலப் போதனைகளில் இதற்கு முக்கிய இடம் கொடுப்பார்களா?

## அதிபர்கள் பதவி உயர்வு; நேர்முகப் பரீட்சைகள் தொடர்ந்து நடைபெறும்

கொழும்பு, மே 11

முதலாம், இரண்டாம் தர அதிபர் பதவி உயர்வுகளை வழங்குவதற்கான நேர்முகப் பரீட்சைகள் இன்னும் முடிவடையவில்லை.

இப்பதவி உயர்வுகளைப் பெற்றுக்கொள்வதற்காக இதுவரை சுமார் 4 ஆயிரம் பேர் நேர்முகப்பரீட்சைக்குத்தோற்றியுள்ளனர்.

மேலும் ஒரு தொகுதியினர் முதலாந்தர அதிபர் பதவி உயர்வுகளை பெற்றுக்கொள்வதற்காக எதிர்வரும் 14, 15 ஆம் திகதிகளிலும் -

இரண்டாம் தர அதிபர்

[7 ஆம் பக்கம் பார்க்க]

## மன்னாரில் லியோ கழக வேலை வாரம்

யாழ்ப்பாணம், மே 11

லியோ கழகம் மன்னாரில் ஆரம்பிக்கப்பட்டு நான்கு வருடங்கள் பூர்த்தியாவதை முன்னிட்டு ''வேலை வாரம்'' அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. கடந்த ஏப்ரல் 20 ஆம் திகதி பூர்த்தி அடையும்.

வேலை வாரத்தை யொட்டி வீடுகளுக்கு வரும் லியோ அங்கத்தவர்களை ஆதரிக்குமாறு லியோ செயலாளர் திரு. த. அழகேசன் வேண்டுகோள் விடுத்துள்ளார். (இ)

## நிந்தாவூரில் இளைஞர் நிலையம்

அம்பாறை மே 11

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் இளைஞர் மத்திய நிலையம்ஒன்றுநிந்தாவூரில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது

இதற்கென, 50 ஆயிரம் ரூபாவை திகாமடுள்ள மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ஜனாப் எம். எச். எம் அஷ்ரப் பன்முக வரவுசெலவுத் திட்ட நிதியிலிருந்து ஒதுக்கித் தந்துள்ளார்.

தட்டச்சுடன் வேறும் சில நெறிகளைப் பயிற்றுவித்து வரும் இந்நிலையம் விரைவில் கணனிப் பயிற்சி ஒன்றையும் நடத்தும் என அம்பாறை மாவட்ட இளைஞர் சேவை அலுவலர் திரு. பொன். செல்வநாயகம் தெரிவித்தார். (ப-14)

## இராமநாதன் நினைவாக பொருட்காட்சி

யாழ்ப்பாணம் மே 11

மருதனாமடம் உதவிக் கல்விப் பணிப்பாளர் பணிமனையில் சேர் பொன் இராமநாதனின் ஞாபகார்த்தமாக ஓர் அரும் பெரும் பொருட்காட்சி நிலையம் இம்மாதம் 19 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது.

சேர் பொன். இராமநாதன் உபயோகித்த அரும் பெரும் பொருட்கள், ஏடுகள், ஆவணங்கள் போன்றவற்றை வைத்திருப்பவர்கள் அவற்றை இம்மாதம் 15 ஆம் திகதிக்கு முன் மருதனாமடம் உதவிக் கல்விப் பணிப்பாளர் அலுவலகத்தில் ஒப்படைத்து உதவும்படி கோரப்படுகின்றனர். (இ-7)

# யாழ். பாடசாலைகளிடையே மெய் வல்லுநர் போட்டிகள்

## 16ஆம்17ஆம்திகதிகளில்மத்தியகல்லூரிமைதானத்தில்

யாழ்ப்பாணம் மே 11

யாழ் - மாவட்டப் பாடசாலைகளுக்கிடையேயான மெய் வல்லுனர் போட்டிகள் இம்மாதம் 16 ஆம் 17 ஆம் திகதிகளில் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறும்,

கோட்ட மட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட போட்டியாளர்கள் இதில் கலந்து கொள்கின்றனர்.

இறுதி நாளான 17 ஆம் திகதி நடைபெறும் பரிசளிப்பு விழாவில் யாழ் மாவட்ட கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். ஸ்ரீமதி தேவராணி சுந்தரலிங்கம் பரிசில்களை வழங்குவார்.

மெய்வல்லுனர் போட்டியில் பங்கு பற்றும் வீரர்களுக்கான இலக்கங்கள் இன்று 11 ஆம் திகதி வழங்கப்பட உள்ளன.

சகல பாடசாலைகளுக்கும் அந்தந்த கோட்ட அலுவலகங்களில் வைத்துகாலை 9 30 மணிக்கு இலக்கங்கள் வழங்கப்படும் என உடற்கல்விக்கான கல்வி அதிகாரி த. அருணகிரி ராஜா தெரிவித்தார்.

பாடசாலை விளையாட்டுப் பொறுப்பாசிரியர்கள் போட்டியாளர்களின் பிறப்புச் சான்றிதழ்களையும் அறிமுக கார்ட்டுகளையும் சமர்ப்பித்து இலக்கங்களைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் அவர் கூறினார். (க-9)

### நினைவில் இன்று

11- 05- 1990

★ கவியோகி சுத்தானந்த பாரதியார் ஜனன தினம்

## வை.எம்.சி.ஏ.நூற்றாண்டு விழா

கொக்குவில் மே 11

வை எம். சி.ஏ. தேசிய சபையின் 1990 ஆம் ஆண்டின் வருடாந்த பொதுக்கூட்டமும் யாழ்ப்பாணம் 'வை. எம். சி. ஏ. யின் நூற்றாண்டு விழாவும் இம்மாதம் 25, 26, 27 ஆம் திகதிகளில் யாழ். வை. எம். சி. ஏ மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வைத்திய கலாநிதி ரீ. டபிள்யூ ஜெயகுலராஜா தலைமையில் நடைபெறும். முதல் நாள் நிகழ்ச்சியில், 'வை. எம். சி. ஏ'க்களின் தேசிய சபைத்தலைவர் திரு. ஏக்சித் பெர்னாண்டோ பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

அன்றைய தினம் பிற்பகல் 4 மணிக்கு டேபிள் டென்னிஸ், பட்மின்ரன் இறுதிப் போட்டிகளும், வெற்றிபெற்றோருக்கான பரிசளிப்பு நிகழ்ச்சியும் இடம்பெறும்.

26 ஆம் திகதி சனிக்கிழமை காலை யாழ். வை. ம். சி. ஏ தலைவர் திரு. சாம். எஸ். சதாசிவன் தலைமையில் நடைபெறும் கூட்டத்தில் திரு. ஜே. ஜி. அரசரட்ணம் பிரதான உரையை நிகழத்துவார். இந்நிகழ்ச்சி யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரியில் நடைபெறும்.

பிற்பகல் 4 மணிக்கு நடைபெறும் யாழ். வை, ம். சி. ஏ நூற்றாண்டுவிழா, விழாத் தலைவர் திரு. எஸ். எம். திசநாயகம் தலைமையில் நடைபெறும்.

கனேடிய உயர்ஸ்தானிகர், அமெரிக்க தூதுவர் வண. பிதா. ஜே. ஜே. ஞானப்பிரகாசம் ஆகியோர் பிரதம விருந்தினர்களாக கலந்து கொள்வர். (இ-69)

## தேசிய வீரர் தினத்தையொட்டி கட்டுரை- பேச்சுப்போட்டி

தேசிய வீரர் தினத்தையொட்டி கட்டுரை பேச்சுப் போட்டிகளை நடாத்த யாழ் கல்வித் திணைக்கள அலுவலகம் ஏற்பாடுகளை செய்து வருகிறது.

இதற்கான சுற்றுநிருபம் சகல பாடசாலை அதிபர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதன்படி கட்டுரைப்போட்டியில் பங்குபற்ற விரும்பும் பாடசாலைகள் தங்கள் மாணவர்களால் எழுதப்படும் கட்டுரைகளை எதிர்வரும் 14ஆம் திகதி காலை 10 மணிக்கு முன் யாழ். கல்வித்திணைக்கள அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

பேச்சுப்போட்டி எதிர்வரும் 15ஆம் திகதி காலை 9 மணிக்கு யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறும். (இ - 9)

## மட்டக்களப்பு:

## மாநகர சபை வரிகளை செலுத்துமாறு கோரிக்கை

பட்டிருப்பு, மே 11

மட்டக்களப்பு மாநகரசபை எல்லைக்குள் வதியும் வரியிறுப்பாளர்கள் – மாநகர சபையின் நலன் கருதி செலுத்த வேண்டிய வரியை காலம் தாழ்த்தாது செலுத்தி உதவுமாறு மாநகர ஆணையாளர் திரு. க. கார்த்திகேசு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மாநகர ஆணையாளர் – செய்தியாளர் சந்திப்பொன்றை தனது அலுவலகத்தில் அண்மையில் கூட்டி – மாநகரசபை எதிர் நோக்கும் பிரச்சினைகளைப் பற்றிப் பேசினார்.

மாநகரசபையின் மொத்த வருமானத்தில் 65 சத வீதம் சம்பளத்திலேயே செலவாகிறது. மாதமொன்றுக்கு 12 இலட்சம் ரூபா தேவை என எதிர்பார்க்கிறோம். அமைச்சு இத்தொகையில் ரூ. 5 இலட்சத்து 41 ஆயிரத்தையே தருகிறது.

சோலை வரி, வியாபாரவரி, நீர், மின் வரிகளை – வரியிறுப்பாளர்கள் செலுத்துவதில் அசமந்தப் போக்கு நீடித்தே வருகிறது. நாம் உரிய நடவடிக்கைகள் எடுக்கக் கூடிய வழிகள் இருந்தும் மனிதாபிமான முறையில் நடந்து வருகிறோம். இந்நிலைப்பாட்டை வளர்க்காது வரிகளை வேளைக்குச் செலுத்தி எமது செயலூக்கத்தைப் பெருக்குதல் அவசியம்.

மாநகர எல்லைக்குள் அனுமதியின்றி கட்டடங்களை அமைப்பதும் இனிமேல் தடுக்கப்படும். பொதுச்சந்தை விஸ்தரிப்புக்கும், புதிய கட்டடங்களை அமைப்பதற்கும் நொருட் நிறுவனம் 50 லட்சம் ரூபாவை வழங்கியுள்ளது என்றார் அவர். (இ - 121)

## மூதாட்டி தீக்குப் பலி!

யாழ்ப்பாணம், மே 11

தனிக்குடித்தனம் நடத்திய 82 வயது மூதாட்டி தீப்பிடித்து மரணமானார்.

புதுக்குடியிருப்பைச் சேர்ந்த பெருமாள் லட்சுமி என்னும் மூதாட்டியே பலியானவராவார்.

கடந்த 24 ஆம் திகதி அவர் வீட்டில் இருந்த சமயம் குப்பி விளக்கில் இருந்து இவரது உடையில் தீப்பற்றியது. தீக் காயங்களுடன் யாழ். வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட அவர் நேற்று மரணமானார். (அ-3)

## தீவக அபிவிருத்திபற்றி ஆராய்வு

தீவகப் பகுதிகளில் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக இம்மாதம் 21 ஆம் திகதி வேலணையில் கூட்டம் ஒன்று நடைபெறும்.

இக்கூட்டத்தில் வட பிரதேச போக்குவரத்துச் சபை அதிகாரிகள், மின்சாரசபை, நீர் விநியோகப்பகுதி அதிகாரிகள் மற்றும் மீன்பிடிச் சங்கங்கள், ப. நோ. கூ. சங்கங்கள் என்பவற்றின் பிரதிநிதிகள் கலந்து கொள்வர். (ப 111)

## நாணய மாற்று விகிதம்

08-05-1990

இலங்கை மத்திய வங்கிக்கும் வர்த்தக வங்கிகளுக்கும் இடையிலான உடன் மாற்றுவிகிதம்:-

| | | வாங்குதல் | விற்றல் |
|---|---|---|---|
| 100 | இந்திய ரூபா | 230.37 | 231.33 |
| 100 | அமெரிக்க டொலர் | 3997.15 | 4002 80 |
| 100 | ஸ்ரேர்லிங் பவுண்ட் | 6656.99 | 6687.60 |
| 100 | ஜேர்மன் மார்க் | 2406.28 | 2424.84 |
| 100 | பிரெஞ்சு பிராங்க் | 712.48 | 725 54 |
| 100 | ஜப்பானிய யென் | 25.1060 | 25.4060 |

## ''திருப்பம்'' வெளியீட்டு விழா

திரு. ஜோசப் பாலாவின் ''திருப்பம்'' சிறுகதைத் தொகுதி நூல் வெளியீட்டு விழா 12ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4. 00மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறும்.

கவிஞர் யாழ். ஜெயம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்ச்சிக்கு அருட் திரு. இல்லறி ஜெபநேசன் ஆசியுரை வழங்குவார். சிறப்பு விருந்தினராக யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. வீ. பி. பாலசிங்கம் கலந்து கொள்வார்.

யாழ். மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. எஸ். டிவகலாலா வெளியீட்டுரையையும், கலாநிதி சவரிமுத்து அடிகள், செங்கை ஆழியான் ஆகியோர் கருத்துரைகளையும் வழங்குவார்கள். (க-7)

## ரெலோ அனுதாபம்

தனது அரசியல் கருத்துக்களுக்காக பலவிதத்திலும் பழிவாங்கப்பட்டிருந்ததிரு சாம். தம்பிமுத்து எம் பியின் உயிரும் இப்போது பறிக்கப்பட்டிருப்பது தமிழ்ப் பிரதேசத்தின் எதிர்கால அரசியலையிட்டு மிக ஆழமான கேள்விகளை எழுப்பி நிற்கிறது.

தமிழ்ஈழ விடுதலை இயக்கம் விடுத்த அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இத்தகைய அரசியல் எமது எதிர்காலச் சந்ததியையும் நாசமாக்கப்போகிறது என்றும் இச்சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட நாம் கடமைப்பட்டிருக்கிறோம்.

தன் இளமைப் பருவத்திலிருந்து தமிழரசுக் கட்சியிலும் பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணியிலும் தீவிரமாக இயங்கிய திரு. 'சாம்' தீவிரவாத இளைஞர்களுக்காக நீதிமன்றத்தில் திறமையுடன் வாதாடியதையும் இச்சந்தர்ப்பத்தில் நாம் நினைவு கூருகின்றோம்.

இப்படி அறிக்கையில் மேலும் தெரிக்கப்பட்டுள்ளது.

## சான்றிதழ் வழங்கலும் கண்காட்சியும்

யாழ்ப்பாணம், மே 11

இணுவில் சைவப்பிரகாச வித்தியாலயத்தில் முறைசாராக் கல்வித் தொழிலகத் தையல் பயிற்சி நெறியில் சித்தியடைந்த மாணவியருக்குச் சான்றிதழ் வழங்கும் வைபவமும், உடையமைத்தல் கண்காட்சியும் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறும்.

பிரதம விருந்தினராகமுறைசாராக் கல்வி அதிகாரி திரு. எஸ். சுப்பிரமணியம் கலந்து கொள்வார். (இ-7)

## கோரிக்கை

நெடுந்தீவு மே 11

நெடுந்தீவில் உள்ள படித்த வேலையற்ற இளம் பெண்கள் சுய தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்ள உதவுமுகமாக தையல் பயிற்சி நிலையம் ஒன்றை அமைக்குமாறு யாழ் தொழிற் திணைக்களத்திடம் நெடுந்தீவு பிரதேச சபை கேட்டுள்ளது. (இ-111)

## வாசகர் திருமுகம்

### சேவை மனப்பான்மை வராதா?

''சிரித்து பேசும் இடமா அது'' எனும் தலைப்பில் 29 04-90 அன்று ஞாயிற்றுக்கிழமை கே. சோமகாந்தன் எனும் வாசகர் எழுதியிருந்த திருமுகம் யாழ். பெரியாஸ்பத்திரியில் தினமும் நடக்கும் உண்மையான நிகழ்வே. நானும் இவ் ஆஸ்பத்திரிக்கு அடிக்கடி சென்று வரும் நோயாளி என்ற முறையில் இதனை பல முறை அறிந்து உணர்ந்துள்ளேன். வாசகர் இக் கருத்தை வெளிக்கொணர்ந்தமைக்கு எனது பாராட்டுக்கள்.

வெளிநோயாளர் பிரிவுக்கான மருந்துக் கவுண்டரில் மட்டுமன்றி மருத்துவ கிளினிக் கவுண்டரிலும் இத்தகைய அசிரத்தையும், அசண்டையீனமும் மருந்தாளர்களிடம் உண்டு தவிரவும் நீண்ட வரிசையில் பல மணி நேரத்திற்கு கால்கடுக்க நின்ற போதும் சிலர் தமது செல்வாக்கையும், அறிந்தவர்கள் என்ற முறையில் கதவைத் திறந்து கவுண்டரினுள்ளும் சென்றுவிடுகின்றனர். அவர்களுக்கு ''உள்ளால்'' மருந்து கொடுக்கப்பட்ட பின்னரே எங்களுக்கு மருந்து கொடுக்கப்படுவது உண்டு.

இதனால் வரிசையில் காத்திருக்கும் பல வயோதிபர்களும், கடும் சுகவீனமுற்றவர்களும் நிலத்திலேயே உட்கார்ந்து விடுகிறார்கள். வந்திருப்பவர்கள் நோயாளிகள் அல்லது நோயாளிகளுக்கு உதவியாக வந்திருப்பவர்கள் என்பதை அறிந்து அக்கறையுடனும், பொறுப்புடனும் சேவை மனப்பான்மையுடன் பணியாற்ற முன்வரமாட்டார்களா?

உ, அம்பிகா,
ஆனைப்பந்தி.

### பயிலுநர் ஆசிரியர் பயிற்சி வகுப்புகள்

பயிலுநர் ஆசிரியர்களிற்கு மற்றைய ஆசிரியர்களைப் போலல்லாது கொடுக்கப்பட்ட சலுகைகள் மிகக் குறைவு. மேலும் அவர்களது உரிமைகளும் பறிபோகும் நிலையிலுள்ளது.

அதாவது இவர்களில் பலர் பட்டத் தேர்வு, பட்ட முன் தேர்வுகளிற்காக தனிப்பட்ட கல்லூரிகளில் விரிவுரைக்கு சமூகமளிக்க வேண்டியவர்களாயுள்ளார்கள். இவர்களிற்கான தொழிற் தூண்டல் வகுப்புகள் சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறுவதால் அவர்களால் இத் விரிவுரைகளிற்கு சமூகமளிக்க முடியாதுள்ளது.

இப்படியான தேர்வுகளிற்கு தோற்றுதல் ஆசிரிய மாணவர்க்கு மிக முக்கியமானதாகையால் அவர்களிற்கு சனி, ஞாயிறு தவிர்ந்த நாட்களில் பயிற்சி வகுப்புக்களை நடாத்த கல்வி அதிகாரிகள் முன்வருவார்களா?

இ. சத்யன்,
சங்கானை.

## கண்டதும் கேட்டதும்

யாழ்தேவி ரயிலில் செல்வோர் வவுனியாவுக்கு அப்பால் பல அனுபவங்களைப் பெறுகின்றனர் அவற்றில் ஒன்று தின்பண்டங்கள்.

யாழ்தேவிப் பிரயாணிகளுக்கு சுவையூட்டுவோர் ரயிலில் தின்பண்டங்கள் கொண்டுவரும் வர்த்தகர்களே செவ்விளநீர், குளிர்பானங்கள், தேங்காய்பூரான், கொய்யாப்பழம், நாரத்தை, தேன், தோடை, தலைக்குழி எள்ளுருண்டை கேக். விளாம்பழம் கச்சான் அல்வா இப்படி பல்வேறு வகையான தின்பண்டங்களுடன் சிகரெட்டுகளும் பத்திரிகைகளும் இடம் பிடித்துக் கொள்கின்றன.

யாழ்தேவி காங்கேசன்துறையிலிருந்து வவுனியா சென்றடையுமட்டும் ஒரு சில வர்த்தகர்கள் மட்டும் வடையுடனும், சோடாவுடனும் வந்து போகின்றார்கள் சிங்கள மக்களின் வர்த்தக ஆர்வம் தமிழ் மக்களுக்கு இல்லாமல் இருக்கிறது.

எமது பிரதேசத்தில் என்னதான் இல்லை? பருத்தித்துறை வடை, நவக்கிரிக் கறுத்தக் கொழும்பான் வவுனியாக் கச்சான், தெல்லிப்பளை வெற்றிலை ஓமந்தை விளாம்பழம், மண்டான் திராட்சை, கீரை வடை, மோர்வடை, இவற்றுடன் பிராந்தியத் தலைநகரிலிருந்து வெளிவரும் 4 தமிழ் தினசரிப் பத்திரிகைகள் இவ்வாறு இந்தப் பட்டியல் விரிந்து செல்லும்!

தூங்கிக் கிடக்குபஎமது வர்த்தகர்கள் பொருளாதார நலனை நாடி யாழ் தேவிக்குச் சுவை கொடுக்க எப்போதும் எழுந்து வருவார்கள்?

செய்திலோலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சரணாலய பகுதியில் ஆயுதம்-பணம்

கொழும்பு மே 11

யால வனவிலங்கு சரணாலயப் பகுதியில் பாதுகாப்புப் படையினரும் பொலிஸாரும் கூட்டாக நடத்திய தேடுதலில் ஆயுதங்களும் பணமும் கைப்பற்றப்பட்டன.

அனாதரவான நிலையில் இருந்த குடிசை ஒன்றினுள் இருந்தே 48 ஆயிரம் ரூபா பணம் கைப்பற்றப்பட்டன. (இ-எ)


### அறிவித்தல்

கொத்தியாலடி
இந்து மயான அபிவிருத்திச் சங்கம்,
சுன்னாகம்

மேற்படி சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் நிகழும் பிரமோதூத வருடம் வைகாசித்திங்கள் 20ஆம் நாள் (03 - 06 - 1990) அன்று யா/மயிலணி சைவ மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும்.

அக் கூட்டத்தில் அங்கத்தவர்கள் பிரேரிக்கவிருக்கும் பிரேரணைகள், விதிகளுக்கான திருத்தங்கள் பற்றிய முன் அறிவித்தலை 19-05-1990 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ செயலாளருக்கு கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கும் வண்ணம் வேண்டப்படுகின்றனர்.

அங்கத்தவர்கள் யாவரும் தவறாது சமூகமளிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

வ. வடிவேலு
செயலாளர்

சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம்.
05 - 05 - 1990        [3534]



### அந்தியேட்டி அழைப்பும், நன்றி நவிலலும்



திரு
**வேலுப்பிள்ளை கிருஷ்ணபிள்ளை**
(ஓய்வு பெற்ற உதவிப் பிரதம தபால் அதிபர்)

தோற்றம்: 14 - 01 - 1907        மறைவு; 13 - 04 - 1990

13 — 05 — 1990

நாட்கள் மாதங்களாகி, மாதங்கள் ஆண்டுகளாகி ஆண்டுகள் யுகங்களானாலும், அன்புத் தெய்வமே! உங்கள் நினைவுகள், எம்நெஞ்சங்களை விட்டு என்றும் நீங்காது.

அன்னாரின் மரணச்சடங்குகளில் நேரில் கலந்து கொண்டவர்களுக்கும், தந்திகள் மூலம் அனுதாபச் செய்திகளைத் தெரிவித்துக் கொண்டவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதுடன், 13 - 05 - 90 இல் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள். பூட்டப்பிள்ளைகள்.

மயிலியதனை,
தொண்டைமானாறு.        [3537]



### 3ஆம் வருட நினைவஞ்சலி



**சட்டநாதன் - சண்முகநாதன்**
[முன்னாள் வடபிராந்திய போக்குவரத்துச்சபை-திடீர் பரிசோதகர்]

ஆண்டவன் படைப்பு: 20 - 12 - 1943        அநியாய அழிப்பு: 16 - 05 - 1987

திதி:-12 - 05 - 90

எங்கள் இதயத்தைவிட்டு உந்தன் நீங்காத நினைவுகள் மறையவில்லை. உம் ஆத்மா சாந்தியடைய வேண்டுகின்றோம்.

அன்பின் மனைவி, பாசமிகு ஆறு பெண் பிள்ளைகள், அருமை மகன் சஞ்சீவன்,
மற்றும் உறவினர்கள்.

இல 41 நொத்தாரிஸ் வீதி
அரியாலை மேற்கு,
யாழ்ப்பாணம்.        (13110)


### விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி அனுசரணையுடன்
# சிற்றூர் தோறும் இணக்க மன்றுகள்
## பொது மக்கள் ஆலோசனையும் கோரப்படுகிறது

யாழ்ப்பாணம், மே 11

விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியின் அனுசரணையுடன் தமிழீழப்பகுதிகளில் சிற்றூர்கள் தோறும் தமிழீழ இணக்க மன்றுகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த இணக்க மன்றுகளின் செயற்பாடுகள் தொடர்பாக விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி பொதுமக்களிடமிருந்து ஆலோசனைகளைக் கோருகிறது.

இது தொடர்பாக விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி விடுத்துள்ள அறிக்கை முழு விவரம் வருமாறு:-

இந்திய ஆக்கிரமிப்பு படையும், துரோகக் கும்பல்களும், தமிழீழ பிரதேசத்தில் காலடி வைக்க முன்பு தமிழீழ விடுதலைப்புலிகளினால் உருவாக்கப்பட்ட இணக்கமன்றுகள் மக்களின் அன்றாட பிரச்சினைகளை தீர்த்து வைத்து திறமையாக இயங்கின.

இந்த இணக்க மன்றுகள் காலதாமதமின்றி மேலதிகச் செலவின்றி கூடிய விரைவில் அன்றாட பிணக்குகளை தீர்த்து வைத்து சிறப்பாகப் பணியாற்றின.

இதனால் மக்கள் மத்தியில் இந்த இணக்க மன்றுகளுக்கு பெரும் செல்வாக்கு ஏற்பட்டிருந்தது.

ஆனால் இந்திய ஆக்கிரமிப்புப்படையும், துரோகக் கும்பல்களும் தமிழீழத்தில் காலடி வைத்த பின்பு இந்த இணக்கமன்றுகள்தொடர்ந்து செயற்பட முடியாமல் தடை ஏற்பட்டிருந்தது. அத்துடன் அன்னியப் படைகளினதும், துரோகக் கும்பல்களினதும் ஆக்கிரமிப்புக் காலத்தில் மக்கள் சொல்லொணாக் கொடுமைகளுக்கு உட்பட்டார்கள். இந்தியப் படைகளுக்கும் அதன் கைக்கூலிகளுக்கும் லஞ்சம் கொடுத்தும் சில சுயநலமிகள் பிரச்சினைகள் திர்க்க முனைந்தார்கள்.

சிலர் தமது சுயநலத்துக்காக அப்பாவிப் பொதுமக்களை அன்னியப்படையினதும் அதன் கைக்கூலிகளினதும் உதவியுடன் கொடுமைப் படுத்தினார்கள்.

அன்னியரின் காலடிகள் எமது தாயகத்தை விட்டகன்ற பின்னர் மக்கள் தம் அன்றாட பிரச்சினைகளை தீர்த்து வைக்கும்படி எம்மை வேண்டுகிறார்கள்.

இந்நிலையில் மக்கள் தம் பிணக்குகளை தமது ஊர்ப் பெரியவர்களுடன் கலந்துரையாடி சமாதான வழியில் தீர்த்து வைக்கும் முகமான இந்த இணக்க மன்றுகள் எமது நேரடிக் கண்காணிப்பில் இயங்கிச் சிறப்பாக நடைபெறும் வகையில் புதிய அமைப்பு வகைகளை உருவாக்கி 'தமிழீழ இணக்க மன்று' என்ற கைநூலை வெளியிட்டுள்ளோம். இவ்வமைப்பு விதிகளுக்கு இணங்க ஒவ்வொரு சிற்றூர் இணக்க மன்றும் அமைக்கப்பட்டு நிர்வகிக்கப்படும்.

இந்த இணக்க மன்றுகள் சிறப்பாக இயங்க மக்களாகிய உங்களது ஒத்துழைப்பு எமக்குத் தேவையாகும் ஏனெனில்இந்த இணக்கமன்றுகளைஅமைப்பதில்மட்டுமல்ல அவற்றை மேற்பார்வை செய்வதுடன் அவை தொடர்பாக ஆக்கபூர்வமான ஆலோசனைகளை எமக்குத் தரவேண்டியது பொதுமக்களாகிய உங்கள் கடமையாகும்.

எனவே இந்த இணக்க மன்றுகளின் செயற்பாடுகள் தொடர்பாக தங்கள் ஆலோசனைகளையும், கருத்துக்களையும் தெளிவாகவும், சுருக்கமாகவும் எழுதி இணக்க மன்ற பொறுப்பாளர் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி தலைமைச் செயலகம், தர்மபுரம் கிளிநொச்சி என்னும் முகவரிக்கு தபால் மூலமாகவோ அல்லது உங்கள் பகுதி பிரதேசப் பொறுப்பாளர் மூலமாகவோ அனுப்புமாறு வேண்டுகின்றோம்.

'தமிழீழ இணக்கமன்று' என்னும் கைநூலின் பிரதி தேவையானால் உங்கள் பகுதி இணக்கமன்றச் செயலாளருடன் ரூபா 5 செலுத்தி பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அறிக்கையின் ஒரு சிறு பகுதி நேற்றைய உதயனில் வெளிவந்தது குறிப்பிடத்தக்கது) (இ)

## மட்டக்களப்பில் நூல் வெளியீடு

பட்டிருப்பு, மே 11

புலவர்மணியின்- விபுலானந்தர் மீட்சிப்பந்து நூல் வெளியீட்டு விழாவும் இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை நினைவு மலர்- செந்தமிழ் களஞ்சியம்' அறிமுகவிழாவும் இம்மாதம் 20 ஆம் திகதி காலை 9 மணிக்கு மட்டக்களப்பு மாநகர மண்டபத்தில் நடைபெறும்.

புலவர்மணி பெரிய தம்பிப்பிள்ளை நினைவுப்பணி மன்றத்தினரின் ஏற்பாட்டில் நடைபெறும். இப்பெருவிழாவுக்கு மன்றத்தின் தலைவர். மகாவித்துவான். எம். எக்ஸ். சி. நடராசா தலைமை வகிப்பார்,

மாவட்டத்தின் என்பது முக்கிஸ்தர்கள் இந்நூல்களின் சிறப்புப்பிரதிகளைப் பெறுவர்

மட்டக்களப்பு இராமகிருஷ்ணமிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி ஜீவனானந்தர். மட்டக்களப்பு— ஆயர். அதி. வண. கலாநிதி, கிங்ஸ்லி, எம், சுவாம்பிள்ளை, மௌலவி, எஸ், எம், அலியார் (பலாஹி) ஆகியோர் ஆசியுரை வழங்குவர். (இ-121)


## HAYLEYS PHOTOPRINT (Private) LTD

இனாம்!   இனாம்!   இனாம்!

இதோ வந்து விட்டது! AGFA COLOUR x R. G 100

காலா காலமாக நினைவில் நிற்கும் நிகழ்ச்சிகளை அழகிய வண்ணப் படமாக்குவதற்கு புத்தம் புதிய வடிவில் அழகிய வர்ணப்படச்சுருளை உள்ளடக்கிய Agfa Colour x R. G. 100 இப்பொழுது விற்பனையாகிக் கொண்டிருக்கிறது. Agfa Colour x R. G. 100 வாங்கும் ஒவ்வொருவருக்கும் இலவசமாக ஒரு அல்பம் கிடைக்கும்! Agfa Colour x R. G. 100 என்று கேட்டு வாங்கிப் பாவியுங்கள்!

வடமாகாண விநியோகஸ்தர்கள்:

**CHRIS MARKETING ORGANISATION**
No. 380, Hospital Road,
JAFFNA.

- படச்சுருள்களை ஐந்தே நாட்களில் கழுவிப் பெற்றுக்கொள்ளலாம்.
- கீழ்க்கண்ட முகவரிகளிலும் இவற்றைப் பெற்றுக் கொள்ளலாம்.

**யாழ்ப்பாணம்**

- சித்திராலயா ஸ்ரூடியோ, இல. 18, ஸ்ரான்லி வீதி.
- ஞானம்ஸ் ஸ்ரூடியோ, மணிக்கூட்டு வீதி.
- மரியநாயகம், கஸ்தூரியார் வீதி.

**சுன்னாகம்**

- பிறின்ஸ் ஸ்ரூடியோ, கே. கே. எஸ். வீதி.
- துர்க்கா ஸ்ரேஷனேர்ஸ் பஸ்நிலையம் முன்பாக.
- சுந்தரம் அன் சன்ஸ் கே. கே. எஸ். வீதி.

[சி-5007]



## உதவித் தாதியர் பயிற்சி நெறி
## Training For Nurses AIDE

**19-05-1990 இல் ஆரம்பமாகவுள்ளன.**

1. தகைமை வாய்ந்த பதிவுத் தாதியர்களால் (R. N. O.) விரிவுரைகள் நடைபெறுகின்றன.
2. பதினெட்டு மாதகால பாடத்திட்டங்களும் அத்துடன் ஆறு மாதகால செய்முறைப் பயிற்சிகள்.
3. செய்முறைப் பயிற்சிகள் யாவும் யாழ்நகரின் பிரபல்யம் வாய்ந்த வைத்தியசாலையில் நடைபெறுகின்றன.
4. அரச அங்கீகாரம் பெற்ற சர்வதேச தகைமையுடைய சான்றிதழ்.
5. பாடத்திட்டங்கள் யாவும் தமிழ் மொழி மூலம் போதிக்கப்படுகின்றன.
6 இலவச ''அக்குபங்சர்'' பயிற்சிகள்.

உங்கள் பதிவுகட்கு:-

அதிபர்,
Dr. V. P. சுந்தரராஜன்,
**சாயி மெடிக்கல் அக்கடமி**
இல. 10, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

[சி-5005]


## யாழ். வர்த்தக வங்கி அணி 2 விக்கெட்டுகளால் வெற்றி

யாழ்ப்பாணம் மே 11

அரியாலை மத்திய விளையாட்டுக் கழக அணியுடன் நடைபெற்ற சினேகபூர்வமான, மட்டுப்படுத்தப்பட்ட 40 ஓவர்கள் கிரிக்கெட் போட்டியில் வர்த்தக வங்கியின் யாழ்ப்பாணக்கிளை அணி 2 விக்கட்டுகளால் வெற்றி பெற்றது.

முதலில் ஆடிய அரியாலை அணி 30.5 ஓவர்களில் 113 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது, றொமேஸ் 38, குகனேந்திரா 25, கோபிநாத் 19 ஓட்டங்களைப் பெற்றனர், பாஸ்கரன் 4.5 ஓவர்களில் 20 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுகளை கைப்பற்றினார்.

அடுத்து ஆடிய வர்த்தக வங்கி அணியினர் 27 ஓவர்களில் 8 விக்கெட் இழப்பிற்கு 116 ஓட்டங்களைப் பெற்றனர். நிக்கொலாஸ் 28, ஜெயபாலன் 20, உமாக்காந்தன் ஆட்டமிழக்காமல் 23 ஓட்டங்களைப் பெற்று அணியின் வெற்றியை உறுதி செய்தனர். அகிலன் 4 விக்கெட்டுகளையும், துர்வாசன் 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர். (உ-மு)

## அகில இலங்கைப் போட்டிக்கு பருத்தித்துறை அணி தெரிவு

எதிர்வரும் ஜூன் மாதம் 4 ஆம் 5 ஆம் திகதிகளில் கொழும்பில் நடைபெறவுள்ள அகில இலங்கை மென்பந்து துடுப்பாட்டப் போட்டிகளில் பங்குபெறுவதற்கு பருத்தித்துறை உதவி அரச அதிபர் பிரிவு அணி தெரிவாகியுள்ளது.

யாழ். மாவட்ட உதவி அரச அதிபர் பிரிவுகளுக்கானபோட்டிகள் அண்மையில் யாழ். சம்பத்திரிசியார் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன.

14 பிரிவுக் குழுக்கள் பங்கு கொண்ட இப் போட்டிகளில் பருத்தித்துறை உதவி அரச அதிபர் பிரிவு அணி முதலிடம் பெற்றது. (ப-118)

## தம்பசிட்டி உதயதாரகை வெற்றிக்கேடயத்தைபெற்றது

பருத்தித்துறை, மே 11

புதுவருடத்தை முன்னிட்டு பருத்தித்துறைசவனாய்விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்பட்ட 6 பேர் கொண்ட 5 ஓவர்கள் மென்பந்து கிரிக்கெட் போட்டியில் உதயதாரகை அணி சிறப்பாக ஆடி பென்சன் அணியைத் தோற்கடித்து கேடயத்தை தனதாக்கிக் கொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய உதயதாரகை அணி 5 ஓவர்கள் முடிவில் 43 ஓட்டங்களைப் பெற்றது தலைவர் மோகன் 12 ஓட்டங்களைப் பெற்றிருந்தார். தொடர்ந்து ஆடிய பென்சன் அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 34 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

உதய தாரகை அணியின் இவ்வெற்றிக்கு அணியின் சிறப்பான பந்துவீச்சேகாரணமாக அமைந்தது குறிப்பாக இறுதி ஓவரில் தென்சன் அணி 10 ஓட்டங்களை பெற வேண்டிஇருந்தபோதும் குலேந்திரனால் வீசப்பட்ட அந்த ஓவர் ஒரு மெய்டின்விக்கெட் ஓவராகவே அமைந்தது ஒரு விசேட அம்சமாகும்.[க-118[

## பாலர் பாடசாலை இல்லப்போட்டி

மாங்குளம் மே 11

தேசிய சர்வோதய சிரமதான இயக்கம் நடத்தும் மேலைப் புலோலி சதாவதமணி பாலர் பாடசாலை இல்லவிளையாட்டுப்போட்டி நாளை 12 ஆம் திகதி தம்பசிட்டி மாலந்தெனியில் திருமதி பூ. கனகசுந்தகம் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக திரு. கி. சிவசுப்பிரமணியமும், சிறப்புவிருந்தினர்களாக திரு. ப. தில்லைநாதன், திரு. கு. சிவயோகன், திரு. நா. சந்திரசேகரம், திரு. செ. அர்ச்சுனா ஆகியோரும் கலந்து கொள்வர். [ப-94]


### 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி

குருர்ப்ரம்மா குருர் விஷ்ணு
குருர் தேவோ மஹேஸ்வர
குருர் ஸாக்ஷாத் பரப்ரம்ம
தஸ்மை ஸ்ரீ குரவே நம!



பிரம்மஸ்ரீ
**கா. மகேஸ்வரக் குருக்கள்**
[மதுரக் குருக்கள்]

தோற்றம்:- 30- 03- 1897        மறைவு:- 17- 04- 1984

சீராரும் ரத்தாக்ஷி சேரும்நற் சித்திரையில்
பேராரும் தேய்பிறையின் துதியையில்- ஆராரும்
போற்றும் மகேஸ்வரக் குருப்பெரியோன்
சாற்றும் இறைபதம் சார்ந்தார் இனிதே.

தங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்,

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

484, காங்கேசன்துறை வீதி,
வண்ணார்பண்ணை
யாழ்ப்பாணம்:        (சி/5013)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனப்பிரச்சினைக்கு

## விரைவில் தீர்வுகாண முஸ்லிம் காங்கிரஸ் வலியுறுத்து!

கொழும்பு, மே 11

விடுதலைப் புலிகளும்' அரச இராணுவமும் மோதுவதன் மூலம் வடக்கு- கிழக்கு மாகாணத்தில் அமைதியை ஏற்படுத்த முடியாது, ஆகவேசகல சமூகங்களும் ஏற்கக்கூடிய சமாதானத் தீர்வைக் காண அவசர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஜனாதிபதிக்குநேற்று அனுப்பியுள்ள கடிதத்தில் முஸ்லிம் காங்கிரஸ் பிரதி தவிசாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாப் எம். எல். ஏ எம். இஸ்புல்லா இவ்வாறு கோரியுள்ளார்.

அந்த கடித விவரம் வருமாறு;-

மோதல் ஏற்பட்டால் அப்பாவி மக்கள் சொல்லப்படுவதுடன், இந்தப் பிரதேசம் பிணக்காடாகக் காட்சியளிக்கும் நிலை உருவாகும். கடந்த காலத்தை விட கூடுதலான பேரழிவுதான் ஏற்படும். அழிவுக்கு இடமளிக்காது பேச்சுவார்த்தை மூலம்இந்தப் பிரச்சினையைத் தீர்க்கவேண்டும்.

அதேநேரம் ஒரு சமூகத்தை- ஒரு விடுதலை இயக்கத்தை- திருப்திப்படுத்த வேண்டும் என்பதற்காக இன்னொரு சமூகம் அடிமையாவதற்கு இடமளிக்கக் கூடாது- என்று கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஒ-2]

## மாடுகளை பிடிக்க குதிரை

நெடுந்தீவு மே 11

நெடுந்தீவில் மாடுகளைப் பிடிப்பதற்கு குதிரைகளைப் பயன்படுத்துகின்றனர்.

அதே சமயம் சிலர் திருட்டுத்தனமாக மாடுகளைப் பிடிப்பதற்கும் குதிரைகளைப் பயன்படுத்துகின்றனர் என்று கூறப்படுகின்றது. (ப-111)

## இதுவரை 101 இளைஞர் சரண்!

கொழும்பு, மே 11

நேற்று முன் தினம் வரை 101 இளைஞர்கள் சரணடைவுக் குழுவிடம் சரணடைந்துள்ளனர்.

அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா முன்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

இதுவரை ஆயிரத்து 728 துப்பாக்கிகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. 4,415 துப்பாக்கிகள் இன்னும் ஒப்படைக்கப்படவுள்ளன.

துப்பாக்கிகளை ஒப்படைக்க தவறியவர்கள் மீது நிர்ப்பந்தம் கொடுக்கும் படி பொலீஸ் மா அதிபருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் சொன்னார். (ஒ-எ)

## நல்லொழுக்க சம்மேளனப் பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம், மே 11

வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனம் தலைவர் திரு. க. செல்வராசா தலைமையில் சுழிபுரம் போரூட் செயலகத்தில் அதன் விசேட பொதுக்கூட்டத்தை அண்மையில் நடத்தியது.

புதிய தலைவராக கிளிநொச்சி சுகாதாரப் பரிசோதகர் திரு. டி. ஜீ.எம் ஜோசப் பொறுப்பு ஏற்றார்.

கூட்டத்தில் கிராமியசேமிப்புத் திட்டத்தை ஏற்படுத்தவும் மது விலக்கல் பிரச்சாரத்துக்காகவும் குழு ஒன்று நியமிக்கப்பட்டது.

போரூட் நிறுவன சிரேஷ்ட திட்ட இணைப்பாளர் திரு கே கணேசலிங்கம் விசேட உரையாற்றினார். செயலாளர் திரு. ஆ. கனகராசா நன்றி கூறினார். (இ-ப)

## மது அருந்தும் அமைச்சர்கள் பதவிதுறக்க வலியுறுத்து!

கொழும்பு, மே 11

மதுபானத்துக்கு அடிமையான அமைச்சர்களும் எம்பிக்களும் தங்கள் பதவிகளை இராஜினாமாச் செய்யவேண்டும் என்று ஜனாதிபதி பிரேமதாஸா பணித்திருக்கிறார்.

விருந்து வைபவங்கள் அல்லது வீடுகளில் மது அருந்துவதையும் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் ஜனாதிபதி தெரிவித்திருப்பதாக தகவல்துறை துணை அமைச்சர் ஏ. ஜே.ரணசிங்க தெரிவித்தார். (உ-எ]

★ COMPUTER COURSES ★
DIPLOMA IN BASIC PROGRAMMING
புதிய பிரிவுகள்
12 - 05 - 1990 (Sat & Sun Batch)
16 - 05 - 1990 (Wed & Thu Batch)
நேரம் 9 30 a. m இல் ஆரம்பமாகும்
I. D. P. COMPUTER CENTRE
342, K. K. S. Road, Jaffna
Branch:- 7th MILE POST MALLAKAM
மல்லாகம் கிளையிலும் புதிய பிரிவுகள்
பி. ப. 4. 00 மணிக்கு ஆரம்பமாகும்
(சி/4369)

# ஆவணப் பணியே மூச்சாக உழைக்கும் தனிமனித முயற்சியாளர் இரா. கனகரத்தினம்

## அவரது சேகரிப்புகள் தமிழருக்குச் சிறந்த தேட்டம்

பல்கலைக் கழகங்கள், ஆராய்ச்சி நிலையங்கள், நிறுவனங்கள் செய்ய வேண்டிய பணிகளைச் சில நேரங்களில் சில தனி மனிதர்கள் செய்கிறார்கள். பல்வேறு துறைகளில் நாம் இந்த நிலைமையைக் காண்கின்றோம்.

இத்தகைய தனி மனிதர்களைக் காணும் போது வியப்பு ஏற்படுகின்றது; இவர்களை உந்தித் தள்ளும் சக்தி யாது என்ற திகைப்பு உண்டாகிறது; இவர்களுக்குத் தக்க அங்கீகாரமும் ஆதரவும் உதவியும் கிடைக்கின்றதா என்ற அங்கலாய்ப்பும் எழுகிறது.

குரும்பச்சிட்டி ''தமிழகத்தில்'' வாழும் திரு. இரா.



இரா. கனகரத்திளம்

கனகரத்தினத்தின் இல்லத்துக்குச் சென்று அவர் ஆற்றி வரும் பணியை நேரில் கண்ட போது அதுபற்றி அவரிடம் கேட்டறிந்த போதும் மேற்கூறிய உணர்வுகள் தான் ஏற்பட்டன.

★ ஏறக்குறைய நாற்பது ஆண்டுகளாக திரு. இரா. கனகரத்தினம் தமிழர் தொடர்பான சம்பவங்களைத் தாக்கி வெளி வந்த பத்திரிகைகளையும் நூல்களையும் பிரசுரங்களையும் சேமித்து வைத்திருக்கிறார்.

★ தமிழினத்தின் அரசியல் பொருளாதார சமுதாய கலாசார வரலாற்றை அவர் பத்திரிகை நறுக்குகள் என்ற வடிவத்தில் திகதி வளியாகவும் ஆண்டு வளியாகவும் தனித்தனியாகக் கட்டிப் பேணிக் காத்து வருகிறார். பத்திர்கை நறுக்குகள் அவரிடம் உண்டு.

★ புகழ் பெற்ற ஆராய்ச்சியாளர்கள் பலருடைய கட்டுரைகளை தனித்தனி ஒட்டுப் புத்தகங்களாக்கி வைத்துள்ளார்.

உலகின் பல்வேறு நாடுகளிலும் வாழ்கின்ற தமிழர்களைப் பற்றி எடுத்துக் கூறும் ஏடுகளை சேர்த்து வைத்திருக்கிறார்.

இந்தச் சமூக உணர்வுள்ள மனிதரை பார்க்க பஸ் மூலம் வயாவிளான் மத்திய மகா வித்தியாலத்தடியில் இறங்கிச் சென்ற போது கடந்த கால யுத்தத்தின் இடிபாடுகளை அவர் வீடு வரை காண முடிந்தது.

இந்த நிலைமையில் எப்படி அவர் இந்த அருமையான தொகுப்புகளைப் பாதுகாத்தார் என்பது தான் எவருக்கும் மனதில் எழக் கூடிய முதலாவது கேள்வி அதை அவரிடம் கேட்டு வைத்தேன்.

அவருடைய தொகுப்பில் ஒரு பகுதி யாழ். பல்கலைக் கழகத்திலும் இன்னொரு பகுதி யாழ். ஆயர் மாளிகையிலும் பத்திரப்படுத்தி வைக்கப்பட்டதாகத் தெரிவித்தார். தான் இந்த விஷயத்தில் காலஞ் சென்ற பேராசிரியர் வித்தியானந்தனுக்கு மிகுதியும் நன்றி உடையவனாக இருப்பதாகத் திரு. கனகரத்தினம் தெரிவித்தார்.

1915 ஆம் ஆண்டு தொடக்கமான பத்திரிகைகளின் நறுக்குகளைத் தாம் தொகுத்து வருவதாகக் கூறிய திரு. கனகரத்தினம் அதன் செய்முறையையும் நேரில் காண்பித்தார்.

பல்வேறு பத்திரிகைகள் கட்டுக் கட்டாக இருக்கின்றன. அவற்றில் எடுக்க வேண்டிய அம்சங்களைக் குறிப்பிட்டு கத்தரித்து தடித்த கடதாசியில் ஒட்டி கோவை (''பைல்'' போலக் கட்டி கறையானுக்கும் பூச்சி புழுவுக்கும் இரையாகாமல் பாதுகாத்து வைக்க வேண்டும்.

பொறுமையான, ஆறுதலான, முடிவேயற்ற வேலை. இதில் அவருடைய துணைவியான பவளராணி கனகரத்தினத்தின் பங்கை அவர் பெருமிதத்துடன் எடுத்துக் கூறினார்.

ஒட்டும் வேலையில் உதவிக்காக ஓரிரு பெண்களை வேலைக்கு அமர்த்தியிருக்கின்றார். ஆனால் திரு. கனகரத்தினத்தின் சர்வவியாபகமான மேற்பார்வை யிலேயே சகல

சந்தித்து எழுதியவர்: வீ. சின்னத்தம்பி

வேலைகளும் நடைபெறுகின்றன.

ஓரிரு பத்திரிகைகளையும் சில நூல்களையும் பாதுகாப்பாக வைத்திருக்கநாம் சிரமப்படுகிறோம். பூச்சி புழுக்கள் அவற்றை நாசப்படுத்தி விடுகின்றன.

இந்த நிலையில் திரு. கனகரத்தினம் இவ்வளவு பத்திரிகைகளையும் நூல்களையும் பத்திரமாக வைத்துப் பயன்படுத்துவது எவருக்கும் மலைப்பைத்தரும்.

இரவுபகல் என்று பாராமல் எந்நேரமும் கடுமையாக உழைக்கும் திரு. கனகரத்தினத்தின் தணியாத ஈடுபாட்டையும் அர்ப்பணிப்பையும் எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

''திரு. கனகரத்தினம் தமிழினத்தின் தனிப்பெரும் பொக்கிஷம்'' என்று பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. க. அருணாசலம் ஒருகட்டுரையில்பொருத்தமாகவே குறிப்பிட்டுள்ளார். என்று அவர் சேகரித்து வைத்திருக்கும் பொக்கிஷங்களைப் பார்த்ததும் தோன்றியது.

அவரது மூச்சும், உழைப்பும் தமிழர் சம்பந்தப்பட்ட விடயங்களை ஆவணப்படுத்துவதாகவே இருக்கின்றன.

திரு. இரா கனகரத்தினம் அமைதியான முறையில் வரலாற்றைக் கட்டி எழுப்பும் ஆவணப்பணியை ஆற்றிவருகிறார் அவருடைய பணி தனிஒரு மனிதனின் முயற்சி என்ற நிலையில் இருந்து பரந்த சமூகத்தின் உதவி பெறும் பணியாகப் பரிணமிக்க வேண்டும். அறிவுத் துறை. சமூகவியல், வரலாற்றியல் சார்ந்தவர்களின் பன்முக ஆதரவும் அவருக்குக் கிடைக்க வேண்டும்.

தமிழர்களின் வரலாற்றையும், கலாசாரத்தையும், பண்பாடுகளையும் பதிவு செய்து வருங்காலத்துக்கு வழங்குவதில் மனம் ஒன்றித் தன்னை அர்ப்பணித்துச் செய்யும் பணி பாராட்டத்தக்கது.

இந்தத் துறையில் ஈடுபடும் ஆர்வமும், அக்கறையும், மன ஒன்றிப்பும் எல்லோருக்கும் வராது. அவை ஒன்று சேர்ந்த அரிய மனிதராகத் திரு. கனகரத்தினம் விளங்குகிறார். அவரது அயராத ஆவணப் பணி ஈழத்தவர்களுக்கு ஓர் சிறந்த தேட்டம்.

★

## சேவை நலம் பாராட்டு விழா

நெடுங்கேணி தபாலகத்தில் 30 ஆண்டுகள் பணியாற்றி ஓய்வு பெறும் சரவையூர் திரு. மயிலு கணபதிப்பிள்ளைக்கு அண்மையில் சேவை நலம் பாராட்டு விழா நடைபெற்றது.

தபாலதிபர் திரு க. கோமலேஸ்வரன் இதற்குத் தலைமை வகித்துப் பேசுகையில், ஓய்வு பெறும் திரு கணபதிப்பிள்ளை இப்பகுதி மக்களுடன் பணிவுடன் பழகி ஆற்றிய சேவையை முன்மாதிரியாகப் பின்பற்றி ஏனைய ஊழியர்களும் நடந்துகொள்ள வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

உபதபாலதிபர் திரு எஸ். கணபதிப்பிள்ளை, பிரதேசசபை தொழில்நுட்ப உத்தியோகத்தர் திரு கே. கணேசன், மற்றும் திருவாளர்கள் ந. சந்திரகுமார், இ. மகேந்திரன், அ. இராசசிங்கம் இ செல்வத்தம்பி என்போரும் உரையாற்றினர்.

ஓய்வு பெற்றுச் செல்லும் திரு கணபதிப் பிள்ளைக்கு தபாலதிபர் சக ஊழியர்கள் சார்பில் பொற்கிழி வழங்கிக் கௌரவித்தார். திரு சி. துரைசிங்கம் நன்றியுரைத்தார். (ப - 108)

## மகஜர்

யாழ்ப்பாணம், மே 11

வடக்கு — கிழக்கில் அரச ஊழியர்களுக்கு ஆபத்து அலவன்ஸாக வழங்கப்படும். ஆறு மாத அரைச் சம்பளம் மன்னார் போக்குவரத்துச் சபை ஊழியர்களுக்கு இன்னமும் வழங்கப்படவில்லை.

இது சம்பந்தமாக அவர்கள் வட பிராந்திய போக்குவரத்துச் சபைத் தலைவருக்கு மகஜர் ஒன்றைக் கையளித்துள்ளனர். (க - 7)

## புரட்சிக் கீதங்கள் மூலம் எம்மைத் தட்டி எழுப்பியவர்

### இசை நிகழ்ச்சியில் சந்திரன் உரை

முல்லைத்தீவு, மே 11

'' தேனிசை செல்லப்பா தனது புரட்சிக் கீதங்கள் மூலம் தமிழ் ஈழமே எமக்கென்று தட்டி எழுப்பி எமது போராட்டத்தை வலுப்படுத்தியவர் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் வன்னிப்பிரதேச அரசியல்பொறுப்பாளர் திரு. சந்திரன் செல்லப்பா குழுவினரின் தேனிசைக்கச்சேரியின் ஆரம்பக்கூட்டத்தில் இவ்வாறு கூறினார்.

கூட்டம் மக்கள் முன்னணி முல்லை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு கைலாஸ் தலைமையில் நடைபெற்றது.

முல்லை- மாவட்ட இராணுவப் பொறுப்பாளர் திரு. திவாகர் தேனிசை செல்லப்பாவை மாலை சூட்டி வரவேற்றார்.

கூட்டத்தில் புலிகள் மக்கள் முன்னணி மகளிர் பிரிவுப் பொறுப்பாளர் செல்வி ஜெனி யாழ்ப்பாணம் கலை கலாசாரப் பிரிவுவைச் சேர்ந்த செல்வி. சீதா, வன்னிப்பிரதேசகலைகலாசாரப் பொறுப்பாளர் திரு. போசன் ஆகியோர் உரையாற்றினர்.

கூட்டம் ஆரம்பமான போது மறைந்த போராளிகளுக்கு இரு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. (க-72)

### கலைவிழா

சேமமடு மே 11

வவுனியா புதுக்குளம் சித்தி விநாயகர் விளையாட்டுக்கழகம் இப்பகுதி சிற்றூரவையின் ஆதரவுடன் விளையாட்டு கலைவிழா நிகழ்ச்சிகளை இம்மாதம் 19 ஆம் திகதி புதுக்குளம் சித்தி விநாயகர் விளையாட்டு மைதானத்தில் கால 7 மணிக்கு நடத்தும். (ப-38)

# செய்திக்கொத்து

### பணிப்பாளர் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்

கொழும்பு மே 11

இந்து சமய, கலாசார அலுவல்கள் துணை அமைச்சினால் உலக இந்து ஆராய்ச்சி நிலையப் பணிப்பாளர் பதவிக்கு விண்ணப்பங்கள்கோரப்பட்டுள்ளன.

விண்ணப்ப முடிவு தினம் மே மாதம் 31 ஆம் திகதியாகும்.

35முதல் 45 வயதுக்கு உட்பட்ட இலங்கைப் பிரசைகள் விண்ணப்பிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிக விவரங்கள் 1990 மேமாதம் 4 ஆம் திகதி வர்த்தமானியில் பிரசுரமாகியுள்ளன. (உ - எ)

### நெடுங்கேணியில்

நெடுங்கேணி மே 11

நெடுங்கேணி ஒலுமடு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலைக்கு விளையாட்டு மைதானம் அமைப்பதற்கான சிரமதான பணிகள் பாடசாலை அதிபர் திரு. கே. கிருஷ்ணன் தலைமையில் அண்மையில் நடைபெற்றன.

பெற்றோர் ஆசிரியர்சங்கச் செயலாளர் திரு.எஸ். தவராசாவின் ஏற்பாடுகளின்படி இப்பணியில் மாணவர்களுடன் இப்பகுதி மக்களும் பெருமளவில் கலந்துகொண்டனர். (ப-108)

### சனசமூகத்துக்கு புதியகட்டடம்

கொழும்புத்துறை மே 11

மாகியம்பதி சூரியோதய சனசமூக நிலையத்தின் புதிய கட்டடத்திறப்பு விழா நிலையத்தின் 40 ஆம் ஆண்டு நிறைவின் போது இடம்பெற்றது.

கட்டடம் யாழ். பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சு. டிவகலாலாவினால் திறந்துவைக்கப்பட்டது. (ப 30)

### செயலகத்துக்கு புதியகட்டடம்

சுழிபுரம் மே 11

வலிகாமம் மேற்குப் பிரிவு உதவி அரச அதிபர் செயலகத்துக்கென புதிய கட்டடம் வழக்கம் பறையில் கட்டப்படும்.

சுழிபுரம் பிரதேச சபை உப செயலகத்துக்கு அருகாமையில் உள்ள அரச காணியில் இது அமையும். (ப-28)

### தச்சுத்தொழில் சங்கம்

கொழும்புத்துறை மே 11

யாழ்மாவட்டத்தில் சகல தச்சுத்தொழிற்சாலை உரிமையாளர்களும் தமக்கென சங்கம் ஒன்றை அண்மையில் அங்குரார்ப்பணம் செய்தனர்.

இந்த ஆரம்ப கூட்டத்தில் தமது தொழிற்சாலைகள் எதிர் நோக்கும் நெருக்கடிகள் சங்க அங்கத்தவர்களது எண்ணிக்கையை அதிகரித்தல் என்பவை குறித்து ஆராயப்பட்டன. (ப-30)

### நெடுந்திவுக்கு உ. அ. அதிபர்

நெடுந்தீவு மே 11

சரவெட்டி உதவி அரச அதிபர் பணிமனையில் நிர்வாக உத்தியோகத்தராகக் கடமையாற்றிய திரு. எம் தம்பிப்பிள்ளை நெடுந்திவுக்கு நிரந்தர உதவி அரசாங்க அதிபராக அண்மையில் பொறுப்பேற்றார். (ப-111)

### போஷகர்

கொக்குவில் மே 11

யாழ். பாலர் கல்விக் கழகத்தின் போஷகர்களில் ஒருவராகபண்டத்தரிப்பு கோட்ட உதவிக்கல்விப் பணிப்பாளர் திரு. இ. சிவானந்தன் ஆட்சிக் குழு உறுப்பினர்களால் நியமிக்கப்பட்டுள்ளார். (ப-69)

### சிரமதானப் பணி

முல்லைத்தீவு மே 11

முல்லைத்தீவு கரைச்சிக் குடியிருப்பு சன சக்திக் குழு, கிராம அபிவிருத்திச் சங்கம், பெற்றோர்கள் பழைய மாணவர்கள் ஆகியோர். முல்லை. தெற்கு கிராமசேவையாளர் திரு சு சிசுந்தரம் தலைமையில் முல்லை. கரைச்சிக்குடியிருப்பு இந்து வித்தியாலயத்தின் விளையாட்டு மைதானத்தைச் சிரமதானம் மூலம் புனரமைத்தனர். (ப-92)

### கொடுப்பனவுகள்

முல்லைத்தீவு மே 11

முல்லைத்தீவு இலங்கை வங்கி அண்மையில் 4 கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த 148 குடும்பங்களுக்கு மீளக்குடியமர்வுப் பணமாக 2000 ரூபாவையும் உற்பத்தி ஊக்குவிப்பணமாக 4000 ரூபாவையும் வழங்கியதாக வங்கி முகாமையாளர் திரு. எஸ். விக்னராசா தெரிவித்தார்.

பணவுதவி பெற்றோர் விபரம் கீழ்வருமாறு:-

1. கொக்குத்தொடுவாய் வடக்கு - 74 குடும்பங்கள், 2 கொக்குத்தொடுவாய் தெற்கு - 13 குடும்பங்கள், 3. கொக்கிளாய் மேற்கு - 30 குடும்பங்கள், 4 கொக்கிளாய் கிழக்கு - 31 குடும்பங்கள் (ப - 92)

## மூன்றாம் ஆண்டு நினைவு



அமரர் M. சிமியாம்பிள்ளை

(இளைப்பாறிய வடமாநில கல்விப் பணிப்பாளர்)

மலர்வு: 3-3-1925 உதிர்வு: 11-5-1987

எம்மில் அணையாத ஒளியாக மிளிர்ந்து நிறைந்த
எம் இனிய தந்தையே!
உன் புன்னகையும் மென் மொழியும் கல் வெட்டாய்
நெஞ்சில் துலங்க
கண்ணீரை கறியாக்கி, நினைவுகளை உணவாக்கி
உண்ணுகிறோம்.
தனக்கென உனையெடுத்த இறைவன்
தன் ஒளியெலாம் உனக்கேற்றி மகிழ்வாராக!

சிமியாம்பிள்ளை குடும்பத்தினர்.

[C/4506]

பட்டதாரிகளுக்கும் / அரசாங்க உத்தியோகத்தர்களுக்கும்
ஓர் அரிய சந்தர்ப்பம்!
இலங்கை நிர்வாக சேவை
(S. L. A. S)
தமிழ்ப்பிரதேசங்களில் உள்ள 150 ற்கும் மேற்பட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்கான
போட்டிப் பரீட்சை
1990 யூன் மாதம் 23 ஆம் திகதி நடைபெறவிருக்கும் இப் பரீட்சைக்கான
விசேட பயிற்சி வகுப்புகள்
ஆரம்பம்: 12- 05- 1990 மு. ப 9 மணி
பாடநெறி: 1. கிரகித்தல் 2. நுண்ணறிவுத்தேர்வு
3. பொது வினாத்தாள்/ விடய ஆய்வு
தகமைகள்:- 30 வயதிற்கு உட்பட்ட பட்டதாரிகளும் / அரசாங்க உத்தியோகத்தர்களும் விண்ணப்பிக்கலாம்.
விண்ணப்ப முடிவுத் திகதி: 18- 05- 1990
★ விரிவுரைகள் சனி. ஞாயிறு தினங்களிலும் விடுமுறைநாட்களிலும்
★ இலவச அச்சடித்த பாடக் குறிப்புகள்
★ கட்டணம் ரூபா 300/- (முழுப்பயிற்சிக்கும்)
விண்ணப்பப் படிவங்களையும் விபரத்திரட்டினையும் எம்மிடம் நேரில்பெற்றுக்கொள்ளலாம்
ASTAN INSTITUTE
[166/1 Hospital Road, Jaffna.]
(A. S சங்கரப்பிள்ளை கட்டிடம் 1ஆம் மாடி)
(சி/4395)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

● அமெரிக்காவில்

# 'ஸ்டிங்கர்' ஏவுகணைகள் வாங்க முயன்ற கடத்தல்காரர் கைது!

வாஷிங்டன், மே 10

கொலம்பியாவைச் சேர்ந்த இரண்டு நபர்களை ஸ்டிங்கர் ஏவுகணைகளை வாங்க முயற்சித்த போது அமெரிக்க பாதுகாப்பு அதிகாரிகள் கைது செய்தனர்.

அமெரிக்கா, புளோரிடா நகரில் இச்சம்பவம் இடம் பெற்றது.

கொலம்பியாவில் கொக்கேயின் போதைக்கடத்தல் காரர்கள் கொலம்பிய அரசுக்கு எதிராக ஆயுதப்போராட்டம் நடத்தி வருவது தெரிந்தே.

கொலம்பியா ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட வேட்பு மனுக்களைச் சமர்ப்பித்த இரண்டு வேட்பாளர்களை போதைக் கடத்தல் காரர்கள் சுட்டுக் கொன்று விட்டனர்.

இப்போது ஜனாதிபதியாக பதவி வகிப்பவரையும் கொல்ல அவர்கள் திட்டமிட்டுள்ளனர்.

ஜனாதிபதி பயணம் செல்லும் ஹெலிக்கொப்டரைச் சுட்டு வீழ்த்துவதன் மூலம் அவரைக் கொல்ல கடத்தல் காரர்கள் சதி முயற்சி மேற்கொண்டிருப்பதாகவும், அதற்குத் தேவையான ஸ்டிங்கர் ஏவுகணைகளை புளோரிடாவில் வாங்குவதற்கு முயற்சித்த இரண்டு கொலம்பியா பிரசைகளும் கைது செய்யப் பட்டனர் என்றும் அறிவிக்கப்பட்டது.

60 லட்சம் டாலர் பணம் கொடுத்துஸ்டிங்கர் ஏவுகணைகளை ஆயுதவிற்பனையாளர் ஒருவரிடம் வாங்க இவர்கள் முயற்சி செய்தனராம்.

இந்திய எல்லைப்புற நகரான லாகூரில் நடந்த இந்த சம்பவம் ஒரு சதிச்செயல் என்று பாகிஸ்தான் தரப்பினர் குற்றஞ்சாட்டினர். (எ)

# கொலம்பியாவில் 'குண்டுவீடு' கடத்தல்காரர்கள் திட்டம்!

பொகொட்டோ' மே 10

கொலம்பியா தலைநகர் பொகொட்டோவில் தேர்தல் அலுவலகம் முன்பதாகக் கார்க் குண்டு ஒன்று வெடித்ததில் ஒருவர் பலியானார். பலர் காயமடைந்தனர்.

போதைவஸ்துக் கடத்தல் காரர்களின் கைவரிசை இது என்று சொல்லப்பட்டது

இதனிடையில் கடத்தல் காரர்கள் பொலீஸ் நிலையங்கள் மற்றும் இராணுவமுகாம்களுக்கு உள்ள வீடுகளை கடத்தல்காரர்கள் வாங்குவதில் ஈடுபட்டுள்ளனர். என்றும் அவ்வீடுகளுக்குள் வெடிப் பொருட்களை நிரப்பி வைக்கிறார்கள் என்றும் கொலம்பியா அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

இவ் வீடுகளை குண்டுகளாகப் பயன்படுத்துவதே கடத்தல்காரர்களின் திட்டம் என்று சொல்லப்படுகிறது. (எ)

★ யூதர் குடியேற்றப் பிரச்சினை:

# அரபுநாடுகள் உச்சி மாநாடு எங்கேநடத்துவது என இழுபறி

செய்ரோ மே10

அரபு நாடுகளின் உச்சி மாநாடு ஒன்றை எங்கே கூட்டுவது என்பது தொடர்பாக சிரியாவுக்கும் ஈரிக்கும் இடையே இழுபறிநிலை ஏற்பட்டுள்ளது.

ஈராக் தனது தலைநகர் பக்தாத்தில் இம் மாநாட்டை நடத்த வேண்டும் என்று வலியுறுத்திவருகின்றது.

சிரியா அதற்கு இணங்க மறுத்துள்ளது.

இது விஷயத்தில் மத்தியஸ்தம் செய்து இணக்கம் ஏற்படுத்தசவூதி அரேபியா, எகிப்து ஆகிய நாடுகள் முயற்சித்து வருகின்றன.

சோவியத் யூனியனில் இருந்து வெளியேறும் யூதர்களை இஸ்ரவேல் தான் ஆக்கிரமிப்புச் செய்து உள்ள பலஸ்தீனப் பிரதேசத்தில் குடியமர்த்துவது தொடர்பாக ஆராய்ந்து என்ன நடவடிக்கை எடுப்பது என்பது பற்றி தீர்மானிக்க அரபு நடுகளின் உச்சி மாநாடு ஒன்று நடத்தப்பட வேண்டும் என்று பலஸ்தீன விடுதலை இயக்கம் கேட்டுள்ளது.

அரபு நாடுகளிடையே இணக்கத்தை ஏற்படுத்த பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தலைமையகம் இயங்கும் ரூனிஸியா தலைநகர் ரூனிஸில் இந்த மாநாட்டை நடத்தலாம் என்று ஆலோசனை கூறப்பட்டுள்ளது. [எ]


## யாழ்ப்பாணக்கல்லூரி

15-05-90 பி. ப. 3.30 மணிக்கு TOEFL புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகும். முன் கூட்டியே பெயர்களைப் பதிவு செய்க. கட்டணம் மூன்று மாதம் ரூபா 400/-

எஸ். ஜெபநேசன்
அதிபர்

[சி-4508]


ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்:
03-03-1970

மறைவு
22-04-1989

கைலாயப்பிள்ளை பாலகுமார்
(பாபு)

ஆயிரம் கற்பனைகள்
ஐயா படைத்திருந்தோம்
தூயவனே எமை நீத்து
தொலை தூரம் சென்றனையோ
நேயமுடன் வளர்த்த எம்மை
அழவைத்து ஏகினையோ
எத்தனை நாளானாலும்
யாம் மறவோம்

தாய், சகோதரர்கள், பேரன், பேத்தி.
கட்டுடை, மானிப்பாய். [சி-4509]

# சீன முஸ்லிம் கிளர்ச்சியாளருக்கு ஆப்கன் போராளிகளின் ஆயுதம்

## இனரீதியான அமைப்புக்களுக்கு பீகிங் அரசு தடை

பீகிங் மே 10

சீனாவில் சிங்கியாங் மாகாணத்தில் முஸ்லிம்கள்கிளர்ச்சி நடத்துவதற்கு ஆப்கன் கெரில்லாக்கள் ஆயுதங்கள் கொடுத்து உதவியதாக பீகிங் வட்டாரங்கள் தெரிவித்தன.

சீனாவில் மேற்குப் பகுதியில் உள்ள இந்த மாகாணத்தில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வசித்து வருகின்றனர்.

கூடுதல் சுயாட்சி கோரி அப்பகுதி முஸ்லிம் மக்கள் அண்மைக்காலமாக கிளர்ச்சி நடத்தி வருகின்றனர்.

இந்த முஸ்லிம் போராளிகளுக்கே ஆப்கன் போராளிகள் ஆயுதங்களைக் கொடுத்து உதவியிருக்கின்றனர்.

இத்தகவலை சிங்கியாங் மாகாணத்தில் நீண்ட காலகாகத் தங்கியிருந்த வெளிநாட்டுப் பிரசை ஒருவர் பி.பி.சி. க்குபீகிங்கில்வைத்து வெளியிட்டார்-

இதனிடையில் - சிங்கியாங் மாகாணத்தில் இயங்கி வந்த இன ரீதியான அமைப்புக்களைச் சீன அரசு தடை செய்து விட்டது. (எ)

# கியூபா மீது தாக்குதல் நடத்த அமெ. படைகள் ஒத்திகை?

ஹவானா, மே 10

கியூபாவை இலக்குவைத்து அமெரிக்கா இராணுவ ஒத்திகையை அத்திலாந்திக் மற்றும் கரிபியன் பகுதிகளில் நடத்தவில்லை "என்று ஹவானாவில் உள்ள அமெரிக்க அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கியூபா மீது விமானத் தாக்குதல்ஒன்றை அமெரிக்கா திட்டமிட்டுள்ளது என்றும் அதற்கான ஒத்திகையில் அமெரிக்கப்படைகள் ஈடுபட்டுள்ளன. என்றும் ஹவானா அரசு குற்றஞ்சாட்டியுள்ளது.

அமெரிக்கா தாக்குதலை நடத்தப் போவதாகக் கூறி கியூபா அரசு தனது இராணுவத் தொண்டர்களை சேவைக்கு அழைத்து உள்ளது.

1962 இல் கியூபாவில் ஏவுகணைகளைப் பொருத்துவதற்கு சோவியத் யூனியன் முயற்சித்தபோது. அமெரிக்காவுக்கும் சோவியத் யூனியனுக்கும் இடையே ஏற்பட்ட நெருக்கடியின் போது கியூபாவில் இராணுவ சேவைக்கு பெரிய அளவில் ஆட்சேர்ப்பு இடம் பெற்றது அதே மாதிரியான இராணுவஆட்சேர்ப்பே இப்போதும் கியூபாவில்இடம் பெறுவதாக ஹவானில் உள்ள வெளிநாட்டுஇராஜதந்திரிகள் தெரிவித்தனர். (எ)

# நேட்டோவின் வலிமையை பாதுகாக்க வேண்டுகோள்

ஒட்டாவா, மே10

ஒரு யுத்தத்தின் போது முதலில் அணு ஆயுதத் தாக்குதலை நடத்த வேண்டும் என்ற தனது கொள்கையை நேட்டோ இராணுவக் கூட்டு கைவிடக்கூடாது.

அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் டிக்கி சேனி இதனை நேற்று செய்தியாளர் மத்தியில் தெரிவித்தார்.

இதற்கு முதலில் நேட்டோ அமைப்பில் உள்ள நாடுகளின் பாதுகாப்பு அமைச்சர்கள் மாநாட்டில் திரு. சேனி கலந்து கொண்டார்.

கிழக்கு ஐரோப்பாவில் இடம்பெறும் மாற்றங்கள் பற்றி இம்மாட்டில் ஆராயப் பட்டன.

வார்ஸோ இராணுவ அமைப்பு பலவீனமடைந்திருப்பினும் நேட்டோ தனது வலிமையை இழக்கக் கூடாது என்றும் அமெரிக்க அமைச்சர் சொன்னார். (எ)

## சோவியத் யோசனை நிராகரிப்பு

இரண்டு ஜேர்மனிகளும் ஐக்கியப்பட்ட பின்னரே அதன் இராணுவ அந்தஸ்து பற்றி தீர்மானிக்க வேண்டும் என்ற சோவியத் யூனியனின் கோரிக்கையை மேற்கு ஜேர்மன் நிராகரித்து விட்டது.

ஐக்கிய ஜேர்மனியின் இராணுவ அந்தஸ்து, அது உருவாகும் முன்னர்தான் நிர்ணயிக்கப்பட வேண்டும் என்று மேற்கு ஜேர்மனி வற்புறுத்தி வருகிறது. (எ)

## நட்பு நாடு எது? இஸ்ரவேல்நிலை

பலஸ்தீன விடுதலை இயக்கத்தை எதிர்க்கும் நாடுகளுடன் தான் இஸ்ரவேல் நட்புறவு வைத்துக் கொள்ளமுடியும்

இஸ்ரவேல் பிரதமர் யிற்விக் ஷாமிர் தன்னைச் சந்தித்த டச்சுநாடாளுமன்றத்தாதுக் குழுவிடம் முன்கண்டவாறு தெரிவித்தார். [எ]

## அரசியல் சீர்திருத்தம்

நிக்கரகுவாவின் ஜனாதிபதிக்குரிய அதிகாரங்களை மட்டுப்படுத்தும் பதினேழு சீர்திருத்தங்களை அரசியல் சாசனத்தில் செய்ய ஆளும் தேசிய அணி தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதி ஒருவர் ஒரு தடவையே அப்பதவியை வகிக்கலாம். ஜனாதிபதி பதவிக்காலம் ஆயுட்காலம் ஆறு ஆண்டுகள் மட்டுமே—இவை சீர்திருத்த யோசனைகளில் இடம் பெறுகின்றன. (எ]

## எகிப்தில் வேலை

வாரத்துக்கு ஆறு நாள் வேலைசெய்யும் திட்டத்தை எகிப்திய ஜனாதிபதி ஹொஸ்னி முபாராக் அமுலுக்கு கொண்டு வந்திருக்கிறார்.

இனி அரச ஊழியர்கள் அனைவரும் வாரம் ஆறு நாள் வேலை செய்ய வேண்டும். வெள்ளிக்கிழமை மட்டுமே வார விடுமுறை தினமாகும். என்று ஜனாதிபதி ஆணை குறிப்பிட்டுள்ளது.

# பிரிட்டன்-பிரான்ஸ் தயாரிக்கும் சூப்பர் கொன்கோர்ட்

பாரிஸ் மே 10

ஒலியிலும் பார்க்க கூடுதலான வேகத்தில் செல்லும் 'கொன்கோர்ட்' விமானத்தைவிட சூப்பர் கொன்கோர்ட் விமானத்தைத் தயாரிக்க பிரான்ஸும் இங்கிலாந்தும் உடன்பாடு செய்து கொண்டு உள்ளன.

சூப்பர் கொன்கோர்ட் விமானம் லண்டனில் இருந்து 5மணி நேரத்தில் டோக்கியோவைச் சென்றடையும்.

கொன்கோர்ட் விமானம் தற்சமயம் 105 பயணிகளை மட்டுமே ஏற்றிச் செல்கிறது.

புதிய சூப்பர் கொன்கோர்ட் 250 முதல் 300 பயணிகளை ஏற்றிச் செல்லக் கூடியது என்று கூறப்படுகிறது.

இவ் விமானத்தைத் தயாரிப்பதற்கான பூர்வாங்க ஆலோசனைகளை மேற்கொள்வதற்கு மட்டும் 2 கோடி ஸ்டர்லிங் பவுண் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. (எ)

# வறுமை ஒழிக்கப்பட வேண்டும் பாப்பாண்டவர் அறை கூவல்

சால்க்கோ, மே 10

லத்தின் அமெரிக்க நாடுகளில் இருந்து வறுமையை ஒழிக்க வேண்டும் என்று பரிசுத்த பாப்பரசர் வேண்டுகோள் விடுத்தார்.

மெக்ஸிக்கோ விஜயத்தின் போது, அங்குள்ள மோசமான சேரிப்புறம் ஒன்றை பாப்பரசர் சென்று பார்வையிட்டார்.

அங்கு குழுமியிருந்தவர்கள் மத்தியில் பாப்பரசர் பேசினார். இலட்சக் கணக்கான எமது சகோதரர்கள் மனிதனாக வாழ்வதற்குத் தேவையான அடிப்படை வசதிகளே இல்லாமல் வாழக் கஷ்டப்படும் போது நாம் மட்டும் அமைதியான வாழ்க்கையை மேற்கொள்வது முடியாத காரியம் - என்று பாப்பரசர் சொன்னார்,

''உங்கள் துன்பம் உங்கள் முகங்களிலே தெளிவாகத் தெரிகிறது'' - இப்படி பாப்பரசர் தன் முன்னால் திரண்டிருந்த சேரிப்புற மக்களைப் பார்த்துச் சொன்னார்.

மெக்ஸிக்கோவில் ஒருவருக்கு ஆகக் குறைந்த சம்பளமாக தினம் 4 அமெரிக்க டாலர்களே கிடைக்கிறது. (எ)

## புதையலில் இருந்து தங்கம்

இரண்டாவது உலக மகா யுத்தத்தின் போது ஜப்பானியர்கள் புதைத்து விட்டுச் சென்ற தங்கத்தை காலஞ்சென்ற பீலிப்பீன்ஸ் ஜனாதிபதி பெர்டினைன்ட் மார்கோஸ் அபகரித்துக் கொண்டாராம்.

இத்தகவலை அரிக்க நீதிமன்றத்தில் தெரிவிக்க தயாராக இருப்பதாக பிலிப்பின்ஸின் மாகாணம் ஒன்றின் ஆளுநராகப் பணிபுரிந்த ஓர்லண்டோதுலே என்ற முன்னாள் இராணுவ அதிகாரி வெளியிட்டார்.

இவர் தற்சமயம் மணிலாவில் சிறைவைக்கப்பட்டிருக்கிறார். (எ)



குமுலுஸ் D.F. போட்டி

BASF
குமுலுஸ் D.F.
பாவித்து மிளகாய் செய்கையில் அதிக விளைவு பெறுவதோடு பரிசுகளையும் பெறுங்கள்

| | |
|---|---|
| நப்சாக் தெளி கருவி — | 5 |
| ஸ்போட்ஸ் துவிச்சக்கர வண்டி — | 5 |
| கைத்தெளி கருவி — | 5 |
| சிறிய வானொலிப்பெட்டி — | 20 |
| எவரெடி ரோச் லைற் — | 48 |
| ரீ சேட் — | 100 |

மிகவும் இலகுவாக இந்த போட்டியில் பங்குபற்றலாம். நீங்கள் செய்ய வேண்டியது.

1. கீழேயுள்ள கூப்பனை அல்லது குமுலுஸ் DF பைக்கற்றுகளிலுள்ள கூப்பனை நிரப்பி, குமுலுஸ் பைக்கற்றுகளின் மேல்பகுதியை வெட்டி ஒவ்வொரு கூப்பனுடனும் 5 குமுலுஸ் மேல்பகுதிகளை சேர்த்து. பின்லே கெமிக்கல்ஸ் அன் டைஸ் (பிரைவேட்) லிமிட்டெட், 186 வக்சோல் வீதி, கொழும்பு 2 என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். ஒருவர் பலமுறை அனுப்பலாம்.
2. தபாலுறையின் இடதுபக்க மேல்பகுதியில் ''குமுலுஸ் DF போட்டி'' என எழுதவும்.
3. போட்டியின் முடிவு திகதி 30-06-1990
4. போட்டியின் அதிஸ்டசாலிகளின் பெயர்கள் பத்திரிகை மூலமும் கடிதம் மூலமும் அறிவிக்கப்படும்.
5. பின்லே கெமிக்கல்ஸ் ஊழியர்களும், பேர்ஸ்ற் அன் போவேட் லிமிட்டெட் ஊழியர்களும் இந்த போட்டியில் பங்குபற்றமுடியாது.







பெயர் ____________
முகவரி ____________
____________
வியாபாரியின் பெயர் ____________
____________
முகவரி ____________
____________

FINCHEM AGRO DIVISION
பின்லே கெமிக்கல்ஸ் அன் டையிஸ் (பிரைவெட்) லிமிட்டெட்
(விவசாய இரசாயன பகுதி)
186, வக்சோல் வீதி, கொழும்பு 2.

Licence No S/731

பீடை நாசினிகள் அபாயகரமானவை. அவதானமாக பாவிக்கவும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திர விழாவை முன்னிட்டு வல்வை நகர் விழாக் கோலம்

யாழ்ப்பாணம், மே 11
இந்திர விழாவை முன்னிட்டு நேற்று முன்தினம் வல்வை நகர் விழாக்கோலம் பூண்டிருந்தது.
வல்வை முத்துமாரியம்மன் ஊறணியில் தீர்த்தோற்சவத்தை முடித்துக் கொண்டு நெடியகாட்டுப் பிள்ளையார் கோயிலுக்கு வருகை தரும் நிகழ்ச்சியே இந்திர விழாவாகக் கொண்டாடப் படுகிறது.
இந்திர விழாவை முன்னிட்டு வல்வெட்டித்துறைப் பகுதியில் முன்னைய இராணுவ முகாம் முதல், வல்வை ஆஸ்பத்திரி வரையான சுமார் 4 மைல் நீள வீதி மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது.
வேம்படி என்ற இடத்தில் வீதிக்கு மேலாக 50 அடி உயரத்தில் தொங்கு மேடை அமைக்கப்பட்டிருந்தது. மேலும், நெடியகாடு பிள்ளையார் கோவில் முன்றல், வல்வை முத்துமாரியம்மன் கோவில் முன்றல் உட்பட பல்வேறு இடங்களில் மேடைகள் அமைக்கப்பட்டு இசை நிகழ்ச்சிகள், வயலின், கச்சேரிகள், நடனம் என்பன நடத்தப்பட்டன. சில இடங்களில் வீடியோ நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.
மேலும் பல பகுதிகளில் 50 அடிமுதல் 200 அடிவரை உயரமுள்ள ராட்சத 'கட்டவுட்'டுகள் வைக்கப்பட்டு மின் அலங்காரமும் செய்யப்பட்டிருந்தன. 200 அடி உயரமான நடனமாடும் பெண், சுமார் 100 அடி உயரமான புலியில் பவனி வரும் ராமபிரான் 'கட்டவுட்'டுகள் அனைவரையும் கவர்ந்தன.
நிகழ்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது இடை இடையே வாண வேடிக்கைகளும் இடம்பெற்றன. நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் வந்த பல்வேறு இசைக் குழுக்கள் ஒரே நேரத்தில் இசை நிகழ்ச்சிகளை நடத்தின. ''சித்தாரா'' இசைக் குழுவினர் இடை இடையே ஈழப் புரட்சி கீதங்களைப் பாடி மகிழ்வித்தனர். (இ-9)

## அதிபர்கள்- ---

[3 ஆம் பக்கத் தொடர்ச்சி]
பதவி உயர்வுகளைப் பெற்றுக் கொள்ள 19, 20 ஆம் திகதிகளிலும் கொழும்பில் நேர் முகப்பரீட்சைக்குத் தோற்றவிருக்கின்றனர்.
கல்விச்சேவை ஆணைக்குழுவின் தலைவர் திரு. ஜோர்ஜ் மெண்டிஸ் இத்தகவலை உதயனுக்குத் தெரிவித்தார்.
இப்பதவி உயர்வுகள் தொடர்பாக நடைபெற்ற எழுத்துப் பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெற்றவர்களே தற்போது நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு வருவதாகவும் அவர் சொன்னார்.
தற்போது தமிழ், சிங்களப் பாடசாலைகளில் முதலாம் இரண்டாம் தர அதிபர் பதவிகளில் சுமார் 2ஆயிரத்து 500 வெற்றிடங்கள் இருக்கின்றன.
தற்போது நடைபெறும் நேர் முகப்பரீட்சைகளின் அடிப்படையில் எத்தனை பேருக்கு பதவி உயர்வுகளை வழங்குவது என்பது குறித்து கல்வி உயர்கல்வி அமைச்சே தீர்மானிக்கும் என்றும் அவர் சொன்னார் (உ-2)


விலங்கியல்
R. ஈஸ்வரதாசன்
B.sc (Cey)
✶ மீன்வளர்ப்பு —
ஆரம்பம்:- 7-5-90
திங்கள் 4.30 P.m
REVISION & PAPER
திங்கள் 5.30 P.m
✶ [உணவுக்கால்வாய்த் தொகுதி]
21, மணல்தறை லேன், கந்தர்மடம் - யாழ்ப்பாணம்.
91 ஆம் ஆண்டுக்குரிய புதியபிரிவு
ஆரம்பம்:- 9-5-90
புதன் 3.30 P.m
[முழு பாடத்திட்டமும் முடிக்கப்படும் ]
(சி-4400)


## சாம் தம்பி --

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
சாங்கத்தின் சார்பில் அமைச்சர் லலித் அத்துலத் முதலி, ஸ்ரீ. ல. சு. கட்சி சார்பில் திரு. அநுர பண்டாரநாயக்கா எம். பி, முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் ஹிஸ்ஸபுல்லா எம். பி. லங்கா சமசமாஜக் கட்சி சார்பில் பேர்னாட் சொய்ஸா, ஸ்ரீலங்கா மக்கள் கட்சியின் இரு பிரிவுகளினதும் சார்பில் திரு. வை. பி. சில்வா, திரு. ரஹிதா செனரத்னா, ரெலோ சார்பில் திரு. ஸ்ரீகாந்தா, ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி சார்பில் திரு சரவை கந்தசாமி, தமிழர் விடுதலைக்கூட்டணி சார்பில் திரு. மாவை சேனாதிராஜா, ஈ. பி. ஆர். எல். எவ்வைச் சேர்ந்த திரு. பிரேமச்சந்திரன் எம்.பி ஆகியோர் உட்பட பல தொழிற்சங்க மற்றும் அரசியல் பிரமுகர்கள் அஞ்சலி உரை நிகழ்த்தினர்.
மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் திரு. தினேஷ் குணவர்த்தன எம். பி, கொழும்பில் உள்ள பிரிட்டிஷ் தூதர் ஜேம்ஸ். டபிள்யூ. ஸ்பேன் ஆகியோரும் இறுதி அஞ்சலி செலுத்துவதற்காக கனத்தை மயானத்துக்கு வந்திருந்தனர்.
கிறிஸ்தவ முறைப்படி சமய அனுஷ்டானங்கள் இடம்பெற்றன. மாலை 4.05 மணிக்கு பூதவுடல் தகனம் செய்யப்பட்டது. (உ-2)

## வேலைகளை ஒருமுகப்படுத்த நடவடிக்கை

பிறப்பு, இறப்பு, விவாக மற்றும் காணிப் திவாளர் அலுவலகங்களின் வேலைகள் ஒருமுகப்படுத்தப்பட அரசு நடவடிக்கை எடுக்க உள்ளது.
பொது மக்களுக்கு சிறந்த சேவை ஆற்றக் கூடிய விதத்தில் இது அமையும். (இ-எ(

## தமிழக- - -

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
நாடு திருப்பி அனுப்பப்பட்டனர்.
விடுதலைப் புலிகளின் பாதுகாப்பில் இவர்கள் இங்கு இருந்தனர். இவர்கள் தமிழ் நாடு அனுப்பப்பட முன்னர் இவர்களது படகும் பழுது பார்க்கப்பட்டது. (இ-9)

## மனித---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
ளுக்காக அவர்போராடினார்.
தேசிய இனப்பிரச்சினைக்கு இராணுவ ரீதியான தீர்வு காண ஆட்சியாளர்கள் முயன்ற போது அதற்கு எதிராக தைரியத்துடன் போராடியவர்.
அவரது உயிரைப் பறிக்க ஏற்கனவே மூன்று தடவை கள் முயற்சிகள் எடுக்கப்பட்டன. ஆனாலும் அஞ்சாது தொடர்ந்து தனது மக்களின் நலனுக்காக உயிரைப்பணயம் வைத்து சேவையாற்றினார்.
ஐக்கிய இலங்கைக்குள் தமிழ் மக்கள் சுயமரியாதையுடனும், சுயநிர்ணய உரிமையுடனும் வாழ வேண்டும் என்பதற்காக அவர் தமது உயிரை அர்ப்பணித்து உழைத்தார். ஜனநாயகம் அமைதி ஏற்பட நாடாளுமன்றத்தை அவர் ஒரு கருவியாக பயன்படுத்தினார்- என்றார். [உ-2]

## இந்திய சரக்கு கப்பல் தப்பியது

புதுடில்லி ,மே 11
வங்காள விரிகுடாக்கடலில் புயலின் 'கண்'ணுக்குள் சிக்கிய இந்திய சரக்குக் கப்பல் சேதம் எதுவுமின்றி சென்னைத் துறைமுகத்தை சென்றடைந்ததாக அறிவிக்கப்படுகிறது.
இந்தக் கப்பலில் பயணம் செய்த 62 பேரும் சுகமாக இருக்கின்றனர் என்றும் அறிவிக்கப்பட்டது.

## சனசமூக போட்டிகள்

கொழும்புத்துறை மே 10
வண்ணை வட மேற்கு சன சமூக நிலையம் தனது 24 ஆம் ஆண்டு விழாவை முன்னிட்டு இம் மாதம் 12 ஆம் 13 ஆம் திகதிகளில் விளையாட்டுப் போட்டிகளை நடத்தும். [த 30]

## சிகிரியா---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
ளையர்களும் திருப்பித் தாக்கியதாகக் கூறப்படுகிறது.
சுமார் ஒரு மணிநேரம் அப்பகுதியில்வேட்டுக்கள் விடாது தீர்க்கப்பட்டதாகவும் —
முடிவில் இரு கொள்ளையர்கள் சுட்டுக் கொல்லப்பட ஏனையோர் தப்பி ஓடியதாகவும் கூறப்பட்டது.
விசேட அதிரடிப்படையினர் தரப்பில் சேதம் ஏதும் இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.
உயிரிழந்த கொள்ளையர் தலைவரின் பெயர் பிரேமதிலக (வயது 39) பேராதனை பல்கலைக்கழக பட்டதாரி. தம்புள்ளையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் ஓர் ஆசிரியர் என்றும் கூறப்பட்டது.
மேற்படி கொள்ளைக் கோஷ்டியினரால் முன்னர் பல இடங்களில் கொள்ளையடிக்கப்பட்டதாகக் கூறப்படும் பொருட்களும் பெருமளவு வெடிமருந்துகளும் படையினரால் மீட்கப்பட்டன. (உ-2)

## யாழ் தொலை---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
பேசிச் சேவை முற்றாக சீர்குலையும் ஆபத்து ஏற்படும் என தொலைத் தொடர்பு உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.
வெட்டப்பட்ட இடத்தில் புதிய கம்பிகளை இணைக்கும் வேலை இன்று நடைபெறும் என்றும்—
இன்று மாலை தொலைபேசிச் சேவை சீரடையும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அந்த அதிகாரி மேலும் சொன்னார். (இ-உ)

## சந்தை விலைகள்

சுன்னாகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம் சந்தைகளில் நேற்றைய மரக்கறி விலைகள் — கிலோ அடிப்படையில்;

| | சுன்னாகம்: | திருநெல்வேலி: | யாழ்ப்பாணம்: |
|---|---|---|---|
| கத்தரி | ரூ. 18 00-20 00 | ரூ. 18.00-20.00 | ரூ. 24 00-26.00 |
| வாழைக்காய் | ரூ. 7.00- 8 00 | ரூ. 3.00- 4.00 | ரூ. 8.00-10.00 |
| பயிற்றங்காய் | ரூ. 18.00-20.00 | ரூ. 20.00-22.00 | ரூ. 22.00-24.00 |
| பாகற்காய் | ரூ. 26.00-28 00 | ரூ. 21.00-23 00 | ரூ. 22.00-24.00 |
| கோவா | ரூ. 10.00 12.00 | ரூ. 10.00-14 00 | ரூ 16.00-18.00 |
| லீக்ஸ் | ரூ. 19.00-21 00 | ரூ. 22.00-23.00 | ரூ 24.00-24.00 |
| கரட் (மலைநாடு) | ரூ. 18.00-20.00 | ரூ. 19.00-18.00 | ரூ. 24.00-24.00 |
| பீற்றூட் | ரூ. 6.00- 8.00 | ரூ. 7.00- 9.00 | ரூ. — |
| பீன்ஸ் | ரூ. — | ரூ. 18 00-20.00 | ரூ. 18.00-20.00 |
| பூசணி | ரூ. 5.00- 6 00 | ரூ. 3.00- 4.00 | ரூ. 6.00- 7.00 |
| பச்சைமிளகாய் | ரூ. 8.00-10.00 | ரூ. 10.00-12.00 | ரூ. 16.00-18.00 |
| வெங் (வேதாளம்) | ரூ. 36.00-38.00 | ரூ. 24.00-40.00 | ரூ. 40.00-42.00 |
| வெங்காயம் (சிறிய) | ரூ. 27.00-32 00 | ரூ. 18.00-22.00 | ரூ. 34.00-36.00 |
| உருளைக்கிழங்கு | ரூ. 28.00-30.00 | ரூ. 28.00-30 00 | ரூ. 30.00-32.00 |
| மரவள்ளிக்கிழங்கு | ரூ. 7.00- 8 00 | ரூ. 6 00- 8.00 | ரூ. 9.00-10.00 |
| வெண்டைக்காய் | ரூ. 16.00-18.00 | ரூ. 15.00-18 00 | ரூ. 18.00-20.00 |

## குண்டு மீட்பு

புதுடில்லி, மே 11
புதுடில்லி ரயில் நிலையம் அருகில் நேற்று அதிசக்தி வாய்ந்த குண்டு ஒன்று கண்டு பிடிக்கப்பட்டு செயலிழக்ச் செய்யப்பட்டது.
குண்டுவெடிப்பதற்கு நான்கு நிமிடங்களுக்கு முன்னர் அது செயல் இழக்கச் செய்யப்பட்டது. (உ-எ)

## பரிபாலன சபை

யாழ்ப்பாணம், மே 11
வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்பாள் தேவஸ்தானத்தின் பரிபாலன சபையின் பொதுக் கூட்டமும், புதிய பரிபாலன சபைத் தேர்வும் ஆலய மண்டபத்தில் நடைபெற்றன.
தலைவர், செயலாளர், பொருளாளர், உட்பட ஒன்பது அங்கத்தவர்களும் போட்டியின்றி சபையினரால் ஏகமனதாகத் சேர்ந்து எடுக்கப்பட்டனர். (க)

## மாட்டு வண்டி. .

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
நின்றனர்.
இப்படியும் கூட்டமா என்று திகைக்கும் அளவுக்கு மைதானத்தின் மூன்று பக்கங்களிலும்ரசிகர்கள் கூட்டம் அலைமோதியது.
நண்பகல் 2.30 மணியளவில் முதலாவது குழுவிற்கான போட்டி ஆரம்பித்து முதல் இறுதிப் போட்டி வரை மாட்டு வண்டிச் சவாரியைப் பார்த்தவர்கள் தலை முதல் பாதம் வரை சிவப்பாக மாறி விட்டார்கள். காற்றுக்கும் பறந்த மண் தவிர, வண்டிகள் ஓடியதால் மேற்கிளம்பிய புழுதிப் புயலாலும் மக்கள் தோய்ந்திருந்தார்கள். யாழ்ப்பாணத்தில் சிவத்த மனிதர்களை நேற்றுப் பார்த்ததும் போட்டியின் ஒரு சிறப்பு.
பல ஆண்டுகளாக மாட்டு வண்டிச் சவாரிப் போட்டிகளைக் கண்டு களிக்கச் சந்தர்ப்பம் கிடைக்காத வயது முதிர்ந்த ஆர்வலர்கள் மிகப் பெரும் எண்ணிக்கையில் நேற்றுக் காணப்பட்டனர். அவர்கள் பழையகால அனுபவங்களை இன்றைய இளைஞர்களுடன் பகிர்ந்துகொண்டதை ஆங்காங்கே காணக்கூடியதாக இருந்தது.
இதற்குமுன் இத்தகைய பிரமாண்டமான போட்டிகளைக் கண்டுகளிக்கச் சந்தர்ப்பம் கிடைத்திராத இன்றைய இளைய தலைமுறையினரும் திடலில் திரண்டிருந்தனர்.
குடாநாட்டின் பல பாகங்களிலிருந்தும் லொறிகள், மினிபஸ்கள், மோட்டார் சைக்கிள்கள், சைக்கிள்கள், வ பி. போ ச. பஸ்கள் ஆகியவற்றில் வந்திறங்கிய மக்கள் மைதானத்தில் பகல் ஒரு மணிக்கே கூடத் தொடங்கிவிட்டனர்.
சவாரிப் போட்டியில் கலந்து கொண்ட வண்டிகள் போட்டா போட்டிக் கொண்டு புழுதியைக் கிளப்பிக் கொண்டு ஓடியதைப் பார்க்க பயிர்க் கூச்செறிந்தது திடலில் நிறைந்த இந்த போட்டியை உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவின் விளையாட்டுக் குழு ஏற்பாடு செய்திருந்தது.
போட்டி முடிந்த பின்னர் மாலை சுமார் 6 மணியளவில் பரிசு பெற்ற பத்து வண்டிகளும் ஊர்வலமாகச் கன்னாசம் சந்தை மைதானத்தைச் சென்றடைந்தன.
அங்கு பரிசளிப்பு விழாவும், கலை நிகழ்ச்சிகளும், நடைபெற்றன. அவற்றைக் கண்டு களிக்க சுமார் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட ரசிகர்கள் இரண்டு நிகழ்ச்சிகளை இரவிரவாக கண்டு களித்தனர். (அ-69)

## மூதூர் இறங்குதுறை சேதம்: ஒற்றைப் பலகையில் படகு ஏறும் பயணிகள்

திருகோணமலை, மே 11
சடுமையாக வீசிய காற்று மற்றும் கடற் கொந்தளிப்புக் காரணமாக மூதூர் இறங்குதுறை மோசமாக சேதமாகியிருக்கின்றது.
இதனால் திருகோணமலை — மூதூர் படகுச் சேவையில் பயணம் செய்வோர் ஆபத்தை எதிர்நோக்கும் நிலையில் இருக்கின்றனர்.
மூதூரில் இறங்குதுறை சேதமுற்றிருப்பதால் படகுக்கு ஏறவும் இறங்கவும் ஒற்றைப் பலகை ஒன்றையே தற்போது பொதுமக்கள் பாவிக்க வேண்டியிருக்கிறது.
ஒற்றைப் பலகையில் ஏறிக் கடக்கும்போது சமநிலை தவறிவிடும் பயணிகள் கடலுக்குள் விழும் ஆபத்து ஏற்பட்டிருக்கிறது.
இவ்வாறு நேற்றுமுன்தினம் கடலுக்குள் விழுந்த பெண் ஒருவர் அருகில் இருந்த சிலரால் காப்பாற்றப்பட்டார்.

## பயங்கரவாதிகளை எதிர்க்க இஸ்ரவேல் உதவி தேவை

### முன்னாள் ஜனாதிபதி கூறினாராம்

1984 இல் இஸ்ரவேல் நலன்புரி நிலையம் ஒன்றைத் திறக்க இலங்கை அரசு அனுமதித்தது. இதற்கு ஐக்கிய தேசியக் கட்சியில் உள்ள முஸ்லிம் உறுப்பினர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர் இஸ்ரவேலின் கெரில்லா எதிர்ப்புப் பயிற்சி இன்றி பயங்கரவாதத்தைஎதிர்த்துப் போராட முடியாத நிலையில் இருப்பதாக பாதுகாப்புப் படையினர் தெரிவித்துள்ளனர் என்று அப்போதைய ஜனாதிபதி பதில் அளித்தார்.
இலங்கையில் உள்ள இஸ்ரவேல் நலன்புரி நிலையத்தை அரசு மூடிவிட்டதற்கு ஆதரவு தெரிவித்து முஸ்லிம் அமைப்புக்கள் கொழும்பில் நடத்திய கூட்டத்தில் வர்த்தக அமைச்சர் ஏ. ஆர். எம். மன்சூர் மேற்கண்டவாறு கூறினார்.
சுதந்திரக்கட்சித் தலைவி திருமதி பண்டாரநாயக்கா பேசுகையில் உலகிலேயே தனது அயல்நாடுகளின் பிரதேசங்களை ஆக்கிரமிப்புச் செய்துள்ள ஒரே ஒரு நாடு இஸ்ரவேல் ஆகும் என்றார். (இ-எ)

## சுய தொழில் வாய்ப்புக்கு ரூ. 28 லட்சம் நிதி ஒதுக்கீடு

### சர்வோதயம் செலவிடும்

யாழ்ப்பாணம், மே 11
வடக்கு, கிழக்கு மாகாணத்தில் உள்ள 778 குடும்பங்களுக்கு சுயதொழில் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக சர்வோதயம் அமைப்பு இந்த ஆண்டு 28 லட்சத்து 34 ஆயிரம் ரூபா செலவிடும்.
திருகோணமலையில் உள்ள சர்வோதயத்தின் வடக்கு, கிழக்கு மாகாண காரியாலயப் பணிப்பாளர் திரு. எம். இராஜசிங்கம் இத்தகவலைத் தெரிவித்தார்.
உத்தேசிக்கப்பட்டதொகையில் 10 லட்சத்து 67ஆயிரத்து 250 ரூபா கடந்த நான்குமாத காலத்தில் ஏற்கனவே செலவிடப்பட்டு விட்டது என்றும் அவர் சொன்னார்
யாழ்ப்பாணத்தில் 2 லட்சத்து 5 ஆயிரத்து 250 ரூபாவும், கிளிநொச்சியில் 71 ஆயிரம் ரூபாவும், மன்னாரில் ஒரு லட்சத்து 11 ஆயிரத்து 250 ரூபாவும், முல்லைத்தீவில் ஒரு லட்சத்து 15 ஆயிரம் ரூபாவும், வவுனியா (தமிழ்ப் பகுதியில்) 73 ஆயிரம் ரூபாவும், வவுனியா (சிங்களப் பிரிவில்) 29 ஆயிரம் ரூபாவும், மட்டக்களப்பில் ஒரு லட்சத்து 29 ஆயிரத்து 500 ரூபாவும், திருகோணமலையில் ஒரு லட்சத்து 27 ஆயிரத்து 250 ரூபாவும், கந்தளாயில் 54 ஆயிரத்து 500 ரூபாவும், அம்பாறையில் 89 ஆயிரத்து 250 ரூபாவும், கல்முனையில் 62 ஆயிரத்து 250 ரூபாவும் செலவிடப்பட்டதாக அவர்மேலும் கூறினார்.
மாவட்ட அடிப்படையில் இந்த நிதி செலவிடப்படுகிறது சிங்களப்பகுதிகளைக் கொண்ட மாவட்டங்களில் சிங்களப் பகுதிகளுக்குத் தனியாகவும், தமிழ்ப்பகுதிகளுக்குத் தனியாகவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. [உ[


அதிஷ்டலாபச் சீட்டு


09 - 05 - 1990 அன்று அதிஷ்டம் பார்க்கப்பட இருந்த இச் சீட்டிழுப்பு எதிர்வரும் 15 - 05 - 1990 (செவ்வாய்க்கிழமை) மாலை 4. 30 மணிக்கு நாயன்மார்கட்டு ஸ்ரீ துர்க்கை அம்பாள் ஆலய முன்றலில் நடைபெறும்.

EUROPE CHINA HOTEL
JAFFNA.
(13142)




பஜாஜ் வாங்கி வெகுமதி பெறுங்கள்


பஜாஜ் வாகனம் ஒன்றை வாங்கும் உங்கள் ஆசைக் கனவை நனவாக்க இதுவே உன்னதமான சந்தர்ப்பம். ஏனெனில், தனித்துவமான பஜாஜ் வெகுமதிப் போட்டியில் கலந்துகொண்டு அற்புதமான பரிசுகளை வெல்லும் அரிய வாய்ப்பினை நீங்கள் பெறுவீர்கள்.
வெகுமதிப் போட்டி நாடளாவிய ரீதியில் கையிருப்பு முடியும் வரை நடத்தப்படும். ஆகவே, உங்கள் பஜாஜ் வாகனத்தை விரைந்து வாங்கிப் போட்டியில் பங்குபற்றுங்கள். பரிசுப் பட்டியலைப் பாருங்கள். எம்மிடமுள்ள புத்தம் புதிய பஜாஜ் வாகன வகைகளைப் பார்க்க வாருங்கள்.



போட்டி விதிகள்
1. றிச்சர்ட் பீரிஸ் அன்ட் கம்பனி லிமிட்டெட் அதன் உப நிறுவனங்கள் அதன் விளம்பர முகவர்களான தொம்ஸன் லங்கா லிமிட்டெட் ஆகியவற்றின் ஊழியர்களும் அவர்களின் குடும்பத்தினரும் தவிர்ந்த சகல இலங்கைப் பிரஜைகளும் இப் போட்டியில் பங்குபற்றலாம்.
2. கையிருப்பு முடியும் வரை மட்டுமே இப் போட்டி நடத்தப்படும்.
3. நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது. 4. கடிதத் தொடர்புகளுக்கு இடமில்லை.


1ம் பரிசு - பஜாஜ் சுப்பர் டிலுக்ஸ் ட்ரைஷோ
2ம் பரிசு - கவசாக்கி பஜாஜ் கே.பி.K.B.100
ஒவ்வொன்றும் ரூ. 2,500/- பெறுமதியான உதிரிப் பாகங்களைக் கொண்ட 10 ஆறுதல் பரிசுகள்

றிச்சர்ட் பீரிஸ் மோட்டோர் கம்பனி லிமிட்
69, அபிட் பார்க் கோனர், கொழும்பு-2. தொலைபேசி :549480, 422149.
கையிருப்பு உள்ளவரை மட்டுமே!
JWT RP 20929


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைப் பிள்ளைகளின் மதிய
உணவுத் திட்டத்திற்கு உகந்தது.

" ஜீவாகாரம் "

இதில் தேவையான அளவு கலோரி, புரதம், விற்றமின், தாதுப்பொருட்கள் அடங்கி உள்ளன.

அண்ணா தொழிலகம்
இணுவில்.


# உதயன்

11 - 05 - 1990 வெள்ளிக்கிழமை


15 கிறாம்

**அண்ணா கோப்பி**

100 வீதம் சுத்தமானது

இது கைதேர்ந்த தொழிலாளர்களினால் காற்றுப் புகாவண்ணம் அடைக்கப்பட்ட பைக்கட்டுகளில் வெளிவருகிறது, இதை வாங்கிப் பாவித்து,

இதன் வெற்றுப் பைக்கட்டுகள் 25 கொடுத்து ஒரு அப்பியாசக்கொப்பியை இனாமாகப் பெற்றுக் கொள்ளவும்.

## தமிழ்-முஸ்லிம் எம்.பிக்களுக்கு விசேஷ பொலிஸ் பாதுகாப்பு

கொழும்பு, மே 11

தமிழர் விடுதலைக் கூட்டணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகியவற்றைச் சேர்ந்த 13 எம்பிக்களுக்கு விசேட பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட இருக்கிறது.

இதற்கான உத்தரவை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா பொலிஸ்மா அதிபருக்கு பிறப்பித்தார்.

கடந்த செவ்வாய் சபாநாயகர் எம். எச். முஹம்மது கூட்டிய மகாநாட்டில் எம்.பிக்களுக்குவழங்கப்பட வேண்டிய பாதுகாப்புப் பற்றி ஆராயப்பட்டது.

அந்த மாநாட்டில்தான் தமிழ் பேசும் எம்பிக்களுக்கு பாதுகாப்பளிப்பது என்று முடிவாகியது.

தமிழ் பேசும் எம்பிக்களுக்கு பாதுகாப்பளிக்கும் பொலிஸ் பிரிவு பொலிஸ் மா அதிபரின் கீழ் இயங்கும் என்று அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா தெரிவித்தார்.

(இ-எ)

பாடசாலைகளில்

## ஆண்டு 9 இலிருந்து தொழிற் பயிற்சி

கொழும்பு மே 11

சகல பாடசாலைகளிலும் ஒன்பதாம் வருடத்தில் இருந்து தொழில் நுட்பம் மற்றும் தொழிற் பயிற்சித் திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சர் லலித் அத்துலத்முதலி முன் கண்டவாறு தெரிவித்தார்.

கொழும்பு ஹோட்டல் தாஜ் சமுத்ராவில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் அமைச்சர் பேசினார்.

அமைச்சர் மேலும் சொன்னதாவது;

ஜீ. சி. ஈ. சாதாரணப் பத்திரப் பரீட்சையை ஒரு மாணவர் எடுப்பதற்கு முன்னர் அவர் தொழில் நுட்பம் ஒன்றில் தகுதி பெற்று இருக்கவேண்டும். அல்லது தொழிற் பயிற்சியில் சித்தி அடைந்திருக்க வேண்டும் என்று அரசு எதிர்பார்க்கிறது.

9 ஆம் வருடத்தில் இருந்து மாணவருக்கு 'பாதுகாப்பு வலை' ஒன்றை ஏற்படுத்திக் கொடுப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

உயர் கல்வி பெறும் வாய்ப்பு ஒரு மாணவனுக்கு ஜீ. சி. ஈ. சாதாரண தரப் பத்திரப் பரீட்சைக்குப் பின் கிடைக்கத் தவறும் போது, இத்தொழிற் பயிற்சி மூலம் அவன் தொழில் நுட்பத் துறையில் உயர்கல்வி பெற்று பட்டதாரியாக முடியும்.

இதன் மூலம் குழந்தைகளை மையமாக வைத்து பெற்றோர் காணும் இலட்சியம் நிறைவேறும்.

இப்படி அமைச்சர் சொன்னார். (இ-எ)

## ஊழியரைசேர்த்துக்கொள்வதில் புதிய நடைமுறை அமுலாகும்

அரசாங்கத் திணைக்களங்கள், உள்ளூராட்சி சபைகள், அரச கூட்டுத்தாபனங்கள், நீதிச்சபைகள் மற்றும் அரசாங்கத்துக்கு உரிய நிறுவனங்களில் ஊழியர்களை வேலைக்குச் சேர்த்துக்கொள்ளும் முறை சம்பந்தமாக பல புதிய தீர்மானங்களை பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் மாகாணசபைகள் அமைச்சு நடைமுறைப்படுத்த இருக்கிறது.

சிற்றூழியர், எழுதுவினைஞர்கள் முதலியோர் தொடக்கம் சகல பதவிகளுக்கும் எதுவித அரசியல் செல்வாக்கும் கருத்துக்கு எடுத்துக் கொள்ளப்படாமல் ஆட்கள் நியமிக்கப்படுவார்கள்.

பதவி உயர்வு வழங்குவதிலும் அரசியல் தலையீட்டுக்கு இடம் அளிக்கப்படமாட்டாது. தேசிய ரீதியிலும் மாகாண அல்லது மாவட்ட ரீதியிலும் சகல நியமனங்களும் பதவி உயர்வுகளும் இன விகிதாசார அடிப்படையிலேயே வழங்கப்பட இருக்கின்றன.

நியமனம் பெறுவதற்குத் தகுதி உடையோர் போட்டிப் பரீட்சைகள் மூலம் தெரிவு செய்யப்படுவார்கள்.

விண்ணப்பதாரரின் தகமைகள், அவர்களின் ஆரோக்கிய நிலை என்பன பற்றி அறிவதற்காக நேர்முகப் பரீட்சைகளும் நடத்தப்படும். ஊழியர்களின் நியமனம் தொடர்பான அலுவல்களைக் கவனிப்பதற்கு உயர் அதிகாரிகளைக் கொண்ட விசேட குழு ஒன்று நியமிக்கப்படும். [க]

## தேங்காய் எண்ணெய் ஏற்றுமதி அதிகரிக்க அரசு நடவடிக்கை

கொழும்பு, மே 11

தேங்காய் எண்ணை ஏற்றுமதியை இந்த ஆண்டு அதிகரிக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கான கூடுதல் வெளிநாட்டுச் சந்தை வாய்ப்பைப் பெற்றுக்கொள்ள கொரியா, இந்தியா, சீனா ஆகிய நாடுகளுடன் இலங்கை பேச்சுக்களை நடத்தி வருகிறது.

அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா இப்பேச்சுக்களை நடத்தி வருகிறார்.

1988 ஆம் ஆண்டில் 5 ஆயிரத்து 380 மெட்ரிக் தொன் தேங்காய் எண்ணை ஏற்றுமதி செய்யப்பட்டது.

1989 ஆம் ஆண்டில் இது 29 ஆயிரத்து 660 மெட்ரிக் தொன்னாக உயர்ந்தது.

(இ-எ)

## "இந்து நாடு" என்ற பெயரை நேபாளம் கை விடுகிறது

காத்மண்டு, மே 11

உலகில் உள்ள ஒரே ஒரு இந்து நாடு என்ற பெயரை நேபாளம் விரைவில் கைவிட உள்ளது.

நேபாளத்தின் புதிய அரசியல் சாசனம் மதசார்பற்றதாக இருக்கும் என்று பிரதமர் கிருஷ்ண பிரசாத் பத்தாரி நேற்று அறிவித்தார்.

விவாக வழிபாட்டில் கலந்து கொண்டு பேசுகையில் பிரதமர் இதனை வெளியிட்டார்.

நேபாள அமைச்சர் பேசுகையில் 'இந்து ராஜ்யம்' என்ற சொற்றொடர் புதிய அரசியல் சட்டத்தில் இடம் பெறாது என்று சொன்னார்.

நேபாளத்தில் இனிமேல் சமயம், மொழி என்ற கட்டுப்பாடு இருக்காது என்றும் அவர் சொன்னார். (இ-எ)

## இந்தியப் படைக்கு ஆதரவளித்தது முஸ்லிம் காங்கிரஸின் தவறல்ல!

### தவிசாளர் சேகு இஸ்ஸதீன் கூறுகிறார்

கொழும்பு, மே 11

இந்தியப் படைக்கு ஆதரவு வழங்கியதற்காக முஸ்லிம் காங்கிரஸ்மீது விடுதலைப்புலிகள் குற்றம் சுமத்துவது சிறுபிள்ளைத்தனமானது.

முஸ்லிம் காங்கிரஸ் தவிசாளர் ஜனாப் சேகு இஸ்ஸதீன் இவ்வாறு உதயனுக்குத் தெரிவித்தார்.

அண்மையில் ஈரோஸ் இயக்கத் தலைவர்கள் முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தனர். இந்தப் பேச்சுவார்த்தையின் விவரம் குறித்துக் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு சொன்னார்.

பேச்சுக்கள் குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஈரோஸ் இயக்கத் தலைவர் திரு. பாலகுமார், விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தலைவர் திரு. வே. பிரபாகரனை அண்மையில் சந்தித்துப் பேசினார். இந்தச் சந்திப்பின் விளைவாகவே ஈரோஸ்—முஸ்லிம் காங்கிரஸ் பிரமுகர்கள் சந்திப்பு எழுந்தது.

வடக்கு கிழக்கின் அமைதிக்கும் பாதுகாப்புக்குமான நிரந்தரத்தீர்வு முஸ்லிம்களை உதாசீனம் செய்வதாலோ அல்லது பயமுறுத்தி அடக்கி வைப்பதிலோ ஒருபோதும் கிடைக்கப்போவதில்லை என்பதைச் சந்திப்பின்போது தெளிவுபடுத்தினோம்.

வடக்கு, கிழக்கில் மாகாண சபை ஆட்சியோ, சமஷ்டி ஆட்சியோ தன்னாதிக்கமுடைய தமிழீழ ஆட்சியோ, —எது நடைபெறுவதானாலும் அதற்கு முஸ்லிம்களின் ஒத்துழைப்பு அவசியமானதாகும்.

இந்தவிடயத்தில் பாராமுகமாக இருந்து ஈ. பி. ஆர். எல். எவ். செய்த அதே தவறை விடுதலைப் புலிகளும் செய்யக்கூடாது என ஈரோஸ் பிரமுகர்களுக்கு எடுத்துரைத்தோம்.

முஸ்லிம் காங்கிரஸ் இந்தியப்படைக்கு ஆதரவளித்தது என்ற குற்றச்சாட்டு சிறுபிள்ளைத்தனமானது.

ஈ. பி. ஆர். எல். எவ், ஈ என். டி. எல். எவ், ரெலோ இயக்கத் தலைவர்களிடமிருந்து முஸ்லிம்களைக் காப்பாற்ற இலங்கை அரசு முன்வராத அந்தச் சந்தர்ப்பத்தில் இந்தியப் படையைப் பகைத்துக்கொள்ளும் நிலையில் முஸ்லிம் காங்கிரஸ் இருக்கவில்லை,

இந்தியப்படை முஸ்லிம்களுக்குப் பெரிதாக எந்த நன்மையும் செய்யவில்லை என்பது உண்மைதான். ஆனால் அன்று அவர்களை வெளியே றும்படி கூறி அவர்களைப் பகைத்துக்கொண்டால் அதனால் முஸ்லிம்சமூகம் மேலும் பல இன்னல்களை எதிர்நோக்கவேண்டியிருந்திருக்கும்.

ஆகவே தமது சமூகத்தைக் காப்பாற்ற முஸ்லிம் காங்கிரஸ் அன்று எடுத்த முடிவு சரியானதே என்பதை விடுதலைப் புலிகள் உணரவேண்டும்.

இவ்வாறான அர்த்தமற்ற பகைமை உணர்வுகளை விடுத்து, முஸ்லிம் காங்கிரஸோடு வடக்கு, கிழக்கின் எதிர்காலத்தைப்பற்றிப் பேசித் தீர்மானித்துக்கொள்ள விடுதலைப் புலிகள் முன்வரவேண்டும். அதுதான் விடுதலைப் புலிகள்மீது முஸ்லிம் மக்களை நம்பிக்கைகொள்ள வாய்ப்பை ஏற்படுத்தும் என்றும் ஈரோஸ் பிரதிநிதிகளுக்குத் தெரிவித்தோம்—என்று கூறினார்.

(உ-2)

## இரு இளைஞர்கள் சரணடைந்தனர்

கொழும்பு, மே 11

தீவிரவாத நடவடிக்கைகள் தொடர்பாக பாதுகாப்புப் படையினரால் தேடப்பட்டு வந்த இரண்டு இளைஞர்கள் கண்டி அரசாங்க அதிபர் பியதாஸ குடகம்மனவிடம் சரணடைந்தனர். (உ-எ)

## ஆந்திராவுக்கு நிவாரணம்

புதுடில்லி, மே 11

சூறாவளி நிவாரண வேலைகளை மேற்கொள்ள ஆந்திர மாநிலத்துக்கு 86 கோடி ரூபாவும் தமிழ்நாடு மாநிலத்துக்கு 39 கோடி ரூபாவும் (இந்தியப் பணத்தில்) மத்திய அரசினால் ஒதுக்கப்பட்டுள்ளது.

(உ-எ)

## வெள்ளவத்தை வெடித்தது "ரைம் பொம்"

கொழும்பு, மே 11

கடந்த செவ்வாய்க்கிழமை வெள்ளவத்தையில் வெடித்த குண்டு, குறிப்பிட்ட நேரத்துக்கு வெடிக்கும்'ரைம் பொம்' என்று கூறப்படுகிறது.

வெள்ளவத்தை பொலிஸ் நிலையத்தில் இருந்து 100யார் தூரத்தில் கொலின்வூட் பிளேஸுக்கு அருகில் இக்குண்டு புதைக்கப்பட்டிருந்தது.

இக்குண்டு வெடித்த சம்பவத்தின் போது மூன்று கடைகளும் ஒரு காரும் சேதமடைந்தன. (இ-எ)

## வணசிங்க நினைவஞ்சலி கூட்டம்

யாழ்ப்பாணம், மே 11

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் முன்னைநாள் தலைவர் அமரர் டி. எஸ்.கே. வணசிங்காவின் நினைவஞ்சலிக் கூட்டம் இன்று வெள்ளிக்கிழமைபிற்பகல் 2-30மணிக்கு யாழ். இந்துமகளிர் கல்லூரியில் நடைபெறும்.

கூட்டத்தை இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கம் ஏற்பாடு செய்துள்ளது.

கூட்டத்தை முன்னிட்டு இன்று யாழ் மாவட்ட பாடசாலைகள் அனைத்தும் 1மணியுடன் மூடப்பட உள்ளன.

[இ-9]

## மரம் நடும்படி கோருகிறார் அத்துலத்

கொழும்பு, மே 11

தினமும் மரம் நடுங்கள். மரம் நடுகையை குறிப்பிட்ட தினத்துக்கு என்று வைக்காதீர்கள்.

இப்படி அமைச்சர் லலித் அத்துலத்முதலி குருத்தலாவையில் நடைபெற்ற [illegible] பாதுகாப்புத் திட்டம் [illegible] தொடக்கி வைத்து [illegible] யில் தெரிவித்தார். [இ-எ]

## அரியாலையில் திருட்டு

யாழ்ப்பாணம், மே 11

வெளிநாட்டு முகவர் நிலையம் ஒன்றுக்கு கட்டுவதற்காக வைக்கப்பட்டிருந்ததாகக் கூறப்படும் 1 லட்சம் ரூபா திருடப்பட்ட சம்பவம் நேற்று அரியாலையில் இடம்பெற்றது.

வீட்டில் இருந்தோர் நித்திரையாக இருந்த சமயம் யன்னல் கம்பியை கழற்றி உள்ளே சென்ற திருடர்கள் பணத்தை எடுத்துக்கொண்டுபின் வாசல் வழியாக தப்பிச் சென்றனர் என்று கூறப்படுகிறது.

## மொழி விளங்காமல் தாக்கிய கான்ஸ்டபிள்

திருகோணமலை, மே 11

மொழி விளங்காததால் சிங்களப் பொலிஸ்காரர் ஒருவர் மக்கள் தொண்டர் படையைச் சேர்ந்த முஸ்லிம் இளைஞர் ஒருவரைத் தாக்கினார்.

இந்தச் சம்பவம் திருகோணமலை ஜமாலியாவில் உள்ள பொலிஸ் துணைக் காவல் நிலையத்தில் கடந்த புதனன்று இடம்பெற்றது.

மொழிவிளங்காத சிங்களப் பொலிஸார் தம்மை முஸ்லிம் இளைஞர் கேலி செய்வதாக நினைத்து அவரைத் தாக்கியதாகக் கூறப்பட்டது.

விடயத்தைக் கேள்விப்பட்ட மேலதிகாரி இருவரையும் அழைத்து விசாரித்ததாகவும்—

அவ்வேளையிலும் முஸ்லிம் இளைஞரை அந்த சிங்கள கான்ஸ்டபிள் தாக்கியதாகக் கூறப்பட்டது.

இந்த விடயம் குறித்து மேல்விசாரணைக்கு உத்தரவிடப்பட்டு இருப்பதாகத் தெரியவருகிறது. [உ-ரி]

## மாணவர்கள் கல்விச் சுற்றுலா

யாழ்ப்பாணம், மே 11

இரணைதீவு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் வித்தியாலயம், துன்னாலை டால்ரன் அக்கடமி ஆகியவற்றைச் சேர்ந்த மாணவ, மாணவிகள் நேற்று கல்விச் சுற்றுலா ஒன்றை மேற்கொண்டு யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் விஜயம் செய்தனர். சுற்றுலாவின் ஓர் அங்கமாக இந்த இருகுழுக்களும் உதயன் செயலகத்துக்கும் வந்திருந்தனர்.

இரணைதீவிலிருந்து வந்த சுற்றுலாக் கோஷ்டியில் அதிபர், 9 ஆசிரியர்கள் 40 மாணவ மாணவிகள் அடங்கி இருந்தனர். இவர்கள் 2 நாள் சுற்றுப் பயணம் ஒன்றை மேற்கொண்டுள்ளனர்.

டால்ரன் அக்கடமியில் இருந்து வந்தோரில் 350 பேர் அடங்கி இருந்தனர்.

திருவில் சமாதி, காங்கேசன் துறை சிமெந்து தொழிற்சாலை, காங்கேசன் துறைமுகம், காரைநகர் சீநோர், கசூரினா கடற்கரை, யாழ்ப்பாணம் கோட்டை, மில்க்வைற் தொழிலகம், ஆகியவற்றுக்கு இவர்கள் நேற்று விஜயம் செய்திருந்தனர்.

[இ]

யாழ்ப்பாணப் பாடசாலைகளில்

## மதிய உணவுக்குப் பதிலாக உணவு முத்திரை வழங்கப்படும்

யாழ். மாவட்டப் பாடசாலைகளில் மதிய உணவுக்குப் பதிலாக உணவு முத்திரை வழங்கப்பட உள்ளது.

இதுபற்றிய சுற்று நிருபம் வந்து சேர்ந்ததும் மதிய உணவு வழங்குவதை நிறுத்திக் கொண்டு உணவு முத்திரைகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இதன்படி உணவுமுத்திரையின் 3ரூபா பெறுமதியான 30 நாட்களுக்குமான சீட்டாக [illegible] மாணவர் பாடசாலைக்கு சமு[illegible] ளடியிடப்படும். பின்னர் அவற்றை கொடுத்து புள்ளியிட்ட நாட்களுக்கான உணவுப் பணத்தை கூட்டுறவுக் கடைகளில் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அறிவுறுத்தப்பட்டது.

இதேவேளை இந்த பணத்துக்கு பெறுமதியான மதிய உணவை தினமும் மாணவர்கள் எடுத்து வர வேண்டும், இதில் கோதுமை பண்டங்கள் சேர்க்கப் படக் கூடாது என்றும் மீறுபவர்களின் [illegible] முத்திரைகள் நிறுத்தப்படும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

(க-3-9)

## குப்பிளான் பகுதியில் இளைஞர் அடித்துக் கொலை

யாழ்ப்பாணம், மே 11

குப்பிளான் பகுதியில் தாக்குதலுக்கு இலக்காகி யாழ். ஆஸ்பத்திரியில் படுகாயங்களுடன் சேர்க்கப்பட்ட இளைஞர் ஒருவர் நேற்றுக் காலை மரணமானார்.

புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த செல்லர் ஞானசெல்வம் [வயது 27 ] என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்தவராவர்.

இந்தச் சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

இறந்த இந்த இளைஞர் சில தினங்களுக்கு முன், தமது பகுதியில் உள்ள சனசமூக நிலையம் ஒன்றின் அங்கத்தினர்கள் சிலருடன் சேர்ந்து குப்பிளான், புன்னாலைக்கட்டுவன் பகுதிகளில் கசிப்பு காச்சிய சிலர்மீது நடவடிக்கைகளில் இறங்கியிருந்தார்,

இதனால் ஆத்திரமடைந்த சிலர் இவரை நேற்று முன்தினம் கடத்திச் சென்று தாக்கிவிட்டு பற்றை ஒன்றிற்குள் போட்டுவிட்டு ஓடிவிட்டார்களாம்.

பின்னர் யாழ். ஆஸ்பத்திரிக்கு படுகாயங்களுடன் கொண்டுவரப்பட்ட அவர் அங்கு மரணமானார்-

இந்த விடயம் குறித்து விடுதலைப் புலிகள் விசாரணை நடத்திவருகின்றனர்.

மேற்படி இளைஞர் மீது தாக்குதல் நடத்தியதாகக் கூறப்படும் சிலரை விடுதலைப் புலிகள் பிடித்திருப்பதாகவும் கூறப்பட்டது.

[உ-9]

## 1.25 க்கு பாண் சீனிச் சம்பலுடன்

கொழும்பு, மே 11

சீனிச்சம்பலுடன் கூடிய நூறு கிராம் பாண் ஒரு ரூபா இருபத்தைந்து சத விலையில் அடுத்த வாரம் கொழும்பில் விற்பனைக்கு வரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த பாணைத் தயாரிப்பதற்கு ஒரு ரூபா 08 சதம் செலவாகிறது. ஒரு ரூபா 25 சதத்துக்கு இப்பாணை விற்கும்போது, விற்பனையாளருக்கு 17 சதம் லாபமாகக் கிடைக்கும். [இ-எ]

## மரண அறிவித்தல்கள்

### திரு. சி. குமாரசாமி

(இளைப்பாறிய உடுவில் உதவி அரசாங்க அதிபர்)

சுன்னாகம் முதலியார் வளவில் வசித்தவரும், இளைப்பாறிய உடுவில் உதவி அரசாங்க அதிபரும் ஆகிய சி. குமாரசாமி அவர்கள் கனடாவில் 6-5-1990ல் காலமானார். அன்னார் சகுந்தலாவின் அன்புக் கணவரும், சாந்தினி (கனடா), நந்தினி (ஆசிரியை தமிழ் கந்தையா வித்தியாசாலை, கந்தரோடை), தர்சினி (கனடா), அவர்களின் அன்புத் தந்தையும், சண்முகநாதன் [கனடா], சுப்பிரமணியம் [B. C.C ஸ்தாபனம்], சிவஞானம் [கனடா], அவர்களின் அன்பு மாமனாரும், பரமேஸ்வரி, வைத்திலிங்கம் [சிங்கப்பூர்] பத்மாவதி கணேசன் [கனடா], திலகவதி, சண்முகநாதன் [கனடா], பத்மநாதன் நாகேஸ்வரி [கனடா], ஆகியோரின் அன்பு மைத்துனரும், சாமினி, யேசன் [கனடா], சியாமளன், சாஈஸ்வரி [கனடா], அவர்களின் அன்புப் பேரனும், சரஸ்வதி, கமலாவதி, [மலேசியா], அவர்களின் அன்புச் சகோதரனுமாவார்

அன்னாரின் ஈமைக்கிரியைகள் கனடாவில் இடம் பெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மா. சுப்பிரமணியம்

வரியப்புலம்,
சுன்னாகம்.

[3538]

### திருமதி பர்வதபத்தினி அம்மா கணேசக்குருக்கள்

தாவடி ஸ்ரீ அம்பலவாண வேதவிநாயகர் ஆலய முன்னாள் பிரதம குரு காலஞ் சென்ற அ. கணேசக்குருக்கள் அவர்களின் அன்பு மனைவி நேற்று [10-5-90] அதிகாலை சிவபதமடைந்தார். இவர் ஜெகதாம்பாளின் அன்புத் தாயாரும், ஜெயமோகன், சந்திரமோகன், ராஜமோகன், சந்தானலக்ஷ்மி ஆகியோரின் அன்புப் பேத்தியாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் நேற்று (10- 05- 90) மாலை தாவடி இந்து மயானத்தில் நடைபெற்றது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
—மு. சந்திரமோகன்

பிள்ளையார் கோவிலடி,
தாவடி,
கொக்குவில்.

(3539)

### திரு. இ. சோமசுந்தரம்

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், அளவெட்டியை வதிவிடமாகக் கொண்டவருமாகிய திரு. இ. சோமசுந்தரம் 10-05-1990 இல் காலமானார்.

அன்னார் காலம்சென்ற இலங்கைகாவலர் — கனகம்மாவின் மகனும், காலம்சென்ற கிருஷ்ணசாமியின் (முந்திரியத் தோட்டம் உரும்பராய்) சகோதரரும், செங்கமலத்தின் அன்புக் கணவரும், கனகேஸ்வரி, குகதாஸ், நரேந்திரன், மோகனதாஸ், கோணேஸ்வரன், அருள்தேவி, ரதிதேவி, கீதா கிருஷ்ண தாசன், துஷ்யந்தி ஆகியோரின் அன்புத் தந்தையும், கமலாதேவி (உரும்பராய்), இராசரத்தினம், கனகரத்தினம், தம்பிராசா, தங்கரத்தினம், அன்னலட்சுமி, மல்லிகாதேவி, யோகேஸ்வரி, கமலாதேவி ஆகியோரின் அருமை மைத்துனருமாவார்.

ஈமக்கிரியைகள் 11-05-1990 வெள்ளிக்கிழமை பகல் 12-00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும்.

தகவல்:
சு. தம்பிராசா

நுங்கயப்புலம்,
அளவெட்டி தெற்கு.

[13138]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 11-05-1990இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org